வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
T.P: 011 236 2086
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram.
Ria
MONEY TRANSFER
WESTERN UNION

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 18.04.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 109 பக்கங்கள் : 12

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்ததை அறிந்து வெளியிடுவோம்!

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

- கையகப்படுத்திய காணிகளை விடுவிப்போம்
- திஸ்ஸ விகாரை பிரச்னையை தீர்ப்போம்!
- புலம்பெயர்ந்தவர்கள் நாட்டுக்கு திரும்ப வேண்டும்
- வடக்கு கடல் வளத்தை பாதுகாக்க கடற்படைக்கு உத்தரவு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 18

**"காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தகவல்களையும் வெளிப் படுத்துவோம். அரசாங்கத்திடம் - பொலிஸாரிடம் - இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்துவோம்.", என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா, சங்கிலியன் பூங்காவில் நடந்த பிரசார கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்கள் மக்களை பிரித்துள்ளன. ஆனால், கடந்த பொதுத் தேர்தலின்போது, வடக்கு, கிழக்கு, தெற்கு, தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என அனைவரும் ஒன்றுபட்டு வாக்களித்தனர். அப்படிப்பட்ட ஒன்றிணைந்த தேர்தல்களே வேண்டும். மீளப் பிரிவதற்கு மக்கள் பிரிந்து வாக்களிக்க வேண்டாம். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என அனைவரும் ஒரு நாட்டு மக்களாக ஒன்றாக வாழ வேண்டும்.

சகல மக்களுக்கும் சமனான உரிமை வேண் டும். அவ்வாறான நாடுதான் எமக்கு தேவை. கடந்த காலங்களில்

11

## தபால் மூல வாக்களிப்பு திகதி பிற்போடப்பட்டது

கொழும்பு, ஏப். 18

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளது.

புதிய அறிவிப்பின் படி, எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், முதல் நாளில் வாக்களிக்கத் தவறியோருக்கு ஒதுக்கப்பட்ட மேலதிக நாட்களான 28, 29ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தபால் மூல வாக்களிப்புக்கான தினங்களில் மாற்றமில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு

02

## பொலிஸ், முப்படைகளில் தமிழர் இணையவேண்டும்!

### ஜனாதிபதி அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

அரச சேவையில் தமிழ் மொழி பேசுபவர்களுக்கு பற்றாக்குறை உள்ளது. பொலிஸ் நிலையங்களிலும் இந்த நிலைமை உள்ளது. எனவே, 2 ஆயிரம் புதிய பொலிஸார் பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம், மன்னாருக்கு வந்த ஜனாதிபதி பிரசார கூட்டங்களில்

11



## மக்களின் கருத்தை அறிந்தே காற்றாலை மின்சார திட்டம்!

### மன்னாரில் ஜனாதிபதி உறுதி

மன்னார், ஏப். 18

மக்களின் கருத்துகளை அறிந்து கொண்டு, சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் காற்றாலை மின்னுற்பத் தித் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மன்னாரில் பிரசார கூட்டத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

மேலும், மன்னாரில் காற்றைக் கொண்டு

02

## யாழில் சர்வதேச மைதானம் அமைப்பதற்கு முயல்கிறோம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிக்கிறோம் என்று கூறிய ஜனாதிபதி அநுர, இலங்கை கிரிக்கெட் அணியில் தமிழ், முஸ்லிம் இளைஞர்களும் உள்ளடங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் நடத்திய பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு

11

## பிள்ளையானின் கைதால் ரணில், கம்மன்பில கலக்கம்

### ஜே.வி.பி. பொதுச் செயலர் ரில்வின்

கொழும்பு, ஏப். 18

பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை கைது செய்தவுடன் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் ஏன் கலக்கமடைய வேண்டும். உதய கம்மன்பிலவின் சிங்கள, பௌத்தவாதம் தற்போது காணாமல் போயுள்ளது என்று மக்கள் விடுதலை

11

## மன்னார் - இராமேஸ்வரம் படகு சேவை விரைவில்!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

மன்னார், ஏப். 18

மன்னார் - இராமேஸ்வரம் பயணிகள் படகு சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மன்னாருக்கு சென்ற ஜனாதிபதி மன்னார் பஜாரில் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

## சூத்திரதாரிகள், உதவியோர் யாரென வெளிப்படுத்துங்கள்!

### கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரிகள் மற்றும் இந்தக் கொடூரமான செயலுக்கு உதவியவர்கள் யார் என்பதை கண்டறிவது அவசியமானது - என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரி வித்துள்ளது.

அந்த அமைப்பு உயிர்த்த ஞாயிறு குறித்து

02

## யாழில் மணல் கொள்ளை, கொலைகளில் ஈடுபட்டோர்மீதும் நடவடிக்கை எடுப்போம்!

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள், ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள், பிரஜைகளை கடத்தி காணாமலாக்கியவர்கள் என்று யாழ்ப்பாணத்திலும் உள்ளார்கள். அவர்கள்மீதும் நடவடிக்கைகளை நாம் எடுப்போம் - இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


மேலும், 76 வருடங்களாக காணப்பட்ட சாபக்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்து மாற்றத்தை ஏற்படுத்திய இந்த நாட்டு மக்கள் உலகத்துக்கே முன்னுதாரணமாக

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மன்னாரில் உதவி திட்டங்கள்!



வடமராட்சி, ஏப். 18

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மன்னார் மாவட்டத்தில் பல உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, மன்னார் - பெரியமடு, காயாநகர் கிராமத்தில் வாழ்வாதார உதவியாக விவசாய செய்கைக்காக இரு குடும்பங்கள் பயன்படுத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாயில் ஆழ்துளை கிணறு அமைத்து வழங்கப்பட்டது.

இதேபோன்று, மன்னார் - வட்டக்கண்டல், நறுவிலிக்குளம் கிராமங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவருக்கும் மற்றொருவருக்கும் சிகிச்சைக்காக 25 ஆயிரம் ரூபாய் நிதியும் உலருணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதேபோல, மன்னார் - மடு, பெரியமுறிப்பு கிராமத்தில் இதய நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ செலவுக்காக 25 ஆயிரம் ரூபாய் நிதியும், அத்தியவசியமான உலர் உணவுப் பொதியும் வழங்கப்பட்டன.

மன்னார் - பெரியமடு, காயாநகர் முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைவாக கொட்டகை ஒன்று அமைக்கவும், மன்னார்-இரணைஇலுப்பைக்குளம் சின்னவலயன்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக வேலி அமைக்கவும்

வவுனியா - பெரியதம்பனை வரசித்தி விநாயகர் ஆலய அறநெறி பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களுக்கான மாதாந்த சத்துணவுக்கான நிதி மற்றும் சீருடைகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய் யப்பட்டன.

இந்த உதவித் திட்டங்களையும் கள ஆய்வையும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று மேற்கொண்டார்.

(ஐ-02)



# வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 18

எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகிக்கும் பணி நேற்று ஆரம்பமானது.

வாக்காளர் அட்டைகள் நேற்று முன்தினம் தேர்தல் திணைக்களத்தால் உத்தியோகபூர்வமாக அஞ்சல் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து நேற்றைய தினம்முதல் தபால் ஊழியர்கள் வீடுவீடாக அவற்றை விநியோகித்து வருகின்றனர்.

(ஐ)

# இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 18

முச்சக்கரவண்டியில் வந்த குழு ஒன்று இளைஞர்கள் இருவரை கடத்திச் சென்று தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்களுக்கும் மற்றொரு குழு ஒன்றுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்று தெரிய வந்தது.

வீடு நோக்கி சென்று கொண்டிருந்த இளைஞர்கள் இருவரையும் முச்சக்கரவண்டியில் வந்த குழு கடத்திச் சென்று தாக்கிவிட்டு வீதியில் விட்டுச் சென்றுள்ளது. அப்பகுதியால் வந்தவர்கள் அவர்களை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

## யாழ்.பல்கலை ஓய்வுபெற்ற ஊழியர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் க. நாகஜெயக்குமார் தலைமையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க பொது அறையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

(ஐ)

## தபால்...

தெரிவித்துள்ளது.

முன்னதாக, உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு 22, 23ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறி வித்திருந்தது. இந்த நிலையில், நிராகரிக் கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக தபால் மூல வாக்களிப்பு திகதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## மக்களின்...

மின் உற்பத்தி செய்யக்கூடிய வசதிகள் அதிகமாக காணப்படுகின்றன. ஆனால், கடந்த காலங்களில் சூழல் பாதுகாப்பை கருத் தில் கொள்ளாமல் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட் டன. அதனாலேயே நாங்கள் அதனை தற்காலிகமாக இடைநிறுத்தினோம்.

எதிர்காலத்தில் மக்களின் கருத்து களை அறிந்து கொண்டு, சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் கூறினார்.

(ஐ)

## சூத்திரதாரிகள்...

விடுத்த விசேட செய்தியிலேயே மேற்கண்டவாறு கூறியது.

மேலும், 2025 உயிர்த்த ஞாயிறு தினத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கள் இடம்பெற்று ஆறு வருடங்களா கின்றன. இந்தத் தாக்குதல்கள் குறித்து சுயாதீனமான பக்கச்சார்பற்ற விசாரணைகளை உறுதிசெய்வதற்காக அரசாங்கம் சில சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிக ளை நாங்கள் வரவேற்கும் அதேவேளை, விசாரணையின் இறுதி நோக்கம் குற்ற வாளிகள் யார் - அவர்களுக்கு உதவிய வர்கள் யார் என்பவற்றை வெளிப்படுத் துவனவாக இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம் - என்றும் கூறியுள்ளது.

(ஐ)



## மன்னார்...

மேலும், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரில் இருந்து தமிழ்நாடு இராமேஸ்வரத்துக்கான பயணிகள் படகு சேவையை மீள ஆரம் பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கான பேச்சுகள் தற்போது நடை பெற்று வருகின்றன. விரைவில் படகு சேவை ஆரம்பிக்கப்படும் - என்றார்.

அத்துடன், எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மேலதிகமாக 4 இலட்சம் குடும் பங்களுக்கு அஸ்வசும நிவாரணம் வழங்கப்படும். வடக்கில் நடந்த போர் காரணமாக, மக்களின் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்த வேண்டியிருந்தது. சில வீதிகள் மூடப்பட வேண்டியிருந்தன. தேசிய மக்கள் சக்தி இந்தப் பிரச்னைகள் அனைத்தையும் தீர்த்து அவற்றை விடுவித்துள்ளது.

சட்டம் அனைவருக்கும் சமனான தாகும். முன்னாள் ஜனாதிபதிகளின் புதல்வர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எம்முடைய அரசாங்கம் மக்களின் ஒரு ரூபாயையேனும் வீணடிக்காது - என்றும் கூறினார்.

(ஐ)

# விண்ணக வாழ்வில் ஆண்டுகள் மூபதினொன்று

மலர்வு
29
-
06
-
1931



உதிர்வு
17
-
04
-
1992

## அமரர் செபமாலைமுத்து பீற்றர் திசநாயகம்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
எம்மோடு வாழ்ந்து வழிகாட்டி
உறவுகளை பரிவுடன் நேசித்து
அவர் தம் இன்னல்களில் துடுப்பாய்
நின்று மனங்களை வென்றெடுத்தீரே
மனுமகன் மரித்தநாளில் மண்ணுலக
வாழ்வை முடித்துக் கொண்டீரே
காலங்கள் கடந்தாலும் நின் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் வாழும்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கும்
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், மைத்துனி,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
18.04.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வசைபாடும் அரசியலால் பயனில்லை

உள்ளூராட்சி தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு பிரசாரங்கள் தீவிரமடைந்து வருகின்றன. தமிழ்த் தேசியவாதத்தை முதலீடாகக் கொண்டிருக்கும் கட்சிகளின் பிரசாரங்களில் வழமைக்கு மாறான ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது, அனைவரின் நாவும் அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பற்றியே உச்சரிக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் வெற்றி பற்றிய அச்சமே அனவைவரையும் ஆட்கொண்டிருக்கிறது.

இவ்வாறான பிரசாரங்களுக்கு மகுடம் வைத்தது போன்று, மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றினால் மன்னார் பறிபோய்விடும், காற்றாலை திட்டங்களை முன்னெடுப்பார்கள் என்று குறிப்பிடுமளவுக்கு அநுர அச்சம் அனைவரையும் ஆட்டுவிக்கிறது. ஆனால், மன்னாரில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவோ மக்களின் கருத்துகளை அறிந்து, சுற்றுச்சூழல் கரிசனைகளையும் உள்ளடக்கியவாறு காற்றாலை திட்டம் முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வெறுமனே வாக்குகளுக்காக பொய்யான வாக்குறுதிகளை வழங்கக் கூடாது என்பதில் ஜனாதிபதியிடம் இருக்கின்ற புரிதல் - இந்தியாவின் தயவை நாடியிருக்கும் - அதனை விட்டால் வேறு வழியில்லை என்னும் நிலையிலிருக்கும் தமிழ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து வெளிப்படவில்லை.

தேர்தல் வெற்றியில் தேசிய மக்கள் சக்தி குறுக்கிட்டுவிடும் என்னும் அச்சமே அனைவரையும் கலக்கமடைய வைத்திருக்கிறது. ஆனால், இவ்வாறான விமர்சனங்களுக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தேசிய மக்கள் சக்தியை மோசமாகத் தோற்கடித்தாலும்கூட, அரசியல் நிலைமைகளில் ஒரு துரும்பளவு மாற்றமும் ஏற்படப் போவதில்லை. அதேவேளை மக்கள் அனைவரும் ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றனர் அல்லது தேசமாக திரள்வதாகச் சொல்லப்படுவது போன்றதொரு நிலை மையும் உருவாகப் போவதில்லை.

ஏனெனில், தமிழ்க் கட்சிகள் வழமைபோல் இந்தத் தேர்தலிலும் ஓரணியாகவோ, ஆகக்குறைந்தது தேர்தல் பிரசாரங்களில்கூட ஒருவரையொருவர் நட்புரீதியாக அணுகும் நிலையிலோ இல்லை. தமிழ் அரசு கட்சிக்கு மட்டும் வாக்களிக்குமாறு சுமந்திரன் கூறுகிறார். இது எதனை உணர்த்துகிறது? இன்னொருபுறம், ஏனையவர்கள் அனைவரும் தவறானவர்கள். எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் மட்டுமே தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை எதிர்த்து நிற்கும் செய்தியை வெளிப்படுத்த முடியுமென்று, சைக்கிள் சின்னத்தின் கீழ் போட்டியிடும் அணியினர் கூறுகின்றனர். இந்த நிலையில் மக்கள் எவ்வாறு ஒரு குடையின் கீழ் அணிதிரள முடியும்?


தமிழ்க் கட்சிகளின் பிரசாரங்களை நோக்கும்போது அவர்கள் வழமையான நம்பிக்கையுடன்தான் இப்போதுமிருக்கின்றன. இனப்படுகொலை, போர்க் குற்றம், ஒற்றையாட்சியை எதிர்ப்போம் - இப்படியான சொற்களைக் கொண்டு அரசாங்கத்தைத் தாக்கினால் இலகுவாக வெற்றி பெற்றுவிடலாம் என்றே எண்ணுகின்றனர். அடிப்படையிலேயே தவறிழைக்கின்றனர். இவ்வாறான கதைகளைக் கடந்த பதினைந்து வருடங்களாகக் கூறிவரும் தமிழ்த் தரப்புகளை ஒரு பிரதான தரப்பாக தமிழ் மக்கள் அங்கீகரிக்கவில்லை - ஏன்?

ஏனெனில், மக்களுக்குத் தெரியும் இவர்கள் கூறும் எதுவும் நடக்கப் போவதில்லை. அதனை சாத்தியப்படுத்துவதற்கான பலமும் இவர்களிடம் இல்லை. எனவே, வெற்றி பெற்றால் எங்களால் என்ன செய்ய முடியும், எவ்வாறு மக்களின் வாழ்வை மேம்படுத்துவோம் என்பதைத்தான் தமிழ் கட்சிகள் தங்களின் பிரசாரமாக முன்னெடுக்க வேண்டும். வெறும் வழமையான வசைகளால் இனியும் அரசியலில் கோலோச்ச முடியாது.

# இயேசுவின் மரணம் - ஒரு கொலை!

- அருட்தந்தை ஜீவா போல் அ.ம.தி.

2019 ஈஸ்டர் தாக்ககுதலில் கொல்லப்பட்ட முற்றிலும் களங்கமற்ற மக்களின் கொலைக்கு காரணமானவர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது ஒரு கேலி கூத்தாகும். இதனை எந்தவொரு குற்ற புல னாய்வு அமைப்பும் கூட கண்டுபிடிக்க இயலா மல் இருப்பது மனித கொலைகளை நியாயப் படுத்தும் மனச்சாட்சியை மழுங்கடிக்கும் இரகக்கமற்ற செயல் ஆகும்.



இவ்வாறு இனம், மதம், மொழி என்ற வேற்றுமைகளை கட்டிக்காக்கும் மனிதர்கள் தனித்தும் கூட்டாகவும் ஆயிரக் கணக்கான கொலைகளை திட்டமிட்டுச் செயல்படுத்து கிறார்கள். அரசியல் பீடம் ஏறுவதற்கும், யுத்த ஆயுதங்களை விற்பதற்கும், எல்லைகளை விரி வாக்குவதற்கும், ஆக்கிரமிப்புக்களை துரிதப்படுத்துவதற்கும் என பல்வேறு உள்நோக்கங்களைக் கொண்டு மனித படுகொலைகள் இடம்பெறுவது அன்றாட அனுபவம் ஆகின்றது.

ஆண்டுதோறும் பெரிய வெள்ளி அன்று ஆண்டவர் இயேசுவின் இறப்பை நினைவு கூர்ந்து கிறிஸ்தவ மக்கள் ஆராதனைகளில் பங்குகொண்டு உருக்கமாக வேண்டுதல் செய்வது வழக்கம். அன்பர்கள், நண்பர்கள், மாமனிதர்கள், தியாகிகள் போன்றோர்களது இறப்புக்கள் ஈடுசெய்ய முடியாதவை. "நினைவுகள் இறப்பதில்லை" என்பர். அதன் வழி இறந்தோரின் நினைவுகள் நீங்காத நினைவலைகளாக மனித மனங்களில் ஆழப் பதிந்து வலிகளை ஏற்படுத்துவது மட்டுமல்ல வாழ்வின் அர்த்தங்களை புரிந்துகொள்ள தூண்டுதல் தருகின்றது.



இயேசு கிறிஸ்துவின் இறப்பு வெறுமனே ஒரு உடலை விட்டு உயிர் பிரிந்த சாதாரண நிகழ்வு அல்ல. அவரது இறப்பு அவரது இலட்சிய வாழ்வுக்கு கொடுத்த விலை ஆகும். விவிலிய வரலாற்றில் தோன்றிய இறைவாக்கினர்கள் பலரும் ஈவுஇரக்கமின்றி கொலை செய்யப்பட்டார்கள். இவ் உயிர்த் தியாகம் உண்மைக்கும் நீதிக்கும் சான்றுபகர்ந்ததன் விளைவால் அவர்கள் புரிந்த ஈகை ஆகும்.

ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் இறை தந்தையினால் அனுப்பப்பட்ட இயேசு நீதியும் உண்மையும் கொண்ட விடுதலை வாழ்வை நிலைநாட்ட அரும்பாடு பட்டு உழைத்தார். அடக்குமுறைகளுக்கு வழிகோலிய சட்டங்களை மீறினார். பதவிகளை தக்கவைக்க பொய்யான பிரச்சாரங்களை வலியுறுத்திய சமய, சமூக தலைவர்களை எதிர்த்தார். பாவிகள் குற்றவாளிகள் என்று புறந்தள்ளப்பட்ட மனிதர்களுக்கு இறை இரக்கத்ததை வாரி வழங்கினார்.

மொத்தத்தில் இறை மகனாகிய இயேசுவை அவரது இனத்தை சார்ந்த யூதர்களே அன்னிய அதிகாரத்தின் கையில் ஒப்புவித்து சிலுவைச் சாவை வழங்கியது மட்டுமல்ல, அவரைக் கொன்றதினால் பெருமிதமும் அடைந்தார்கள். எனவே இயேசு இறந்தார் என்று கூறுவதிலும் பார்க்க அவர் கொல்லப்பட்டார் என்று கூறுவது மனித உள்ளங்களை விழித்தெழச் செய்யக் கூடிய சவால் நிறைந்த ஒரு செய்தி ஆகும்.

இயேசுவின் வாழ்வையும் போதனைகளையும் முன்வைக்க விளைந்த மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு நற்செய்தியாளர்களும் இயேசுவின் இறப்பை கட்டம் கட்டமாக விபரித்து அவர் பட்ட கொடூரமான பாடுகளை வாசகர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான நோக்கம் காத்திரமானது. அதாவது யாவரும் தமது வாழ்வில் மனிதத்தை போற்றி மாண்போடு வாழவேண்டியவர்கள் அதற்கு மாறாக மனிதர்கள் அனைவரும் புரியும் கொடுமைகளை சுட்டிக் காட்டுவதற்கே ஆகும்.

இயேசுவின் பாடுகளை நினைந்து அவரது மரணத்தில் (ஒப்பாரி) முகாரி ராகம் இசைக்கும் மனிதர்கள் நாம் உண்மையில் அன்றாடம் சக மனிதர்களை சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தி கொல்லாமல் கொல்லும் எமது நிலை கண்டு வருந்துவதற்கு இப் பெரிய வெள்ளி எம்மை அழைக்கிறது.

இலட்சிய உணர்வோடு மனிதரை மாண்புடன் வாழ வைக்க உயிர்ப் பலி செய்து தம்மை ஈகை செய்த இயேசுவின் வாழ்வு ஒரு முன்னுதாரணமாகும். அவரது சிலுவையை சுமந்து கொண்டு சக மனிதர்களோடு ஒருங்கிணைந்த பயணத்தில் முன்னேறிச் செல்லுவதுதான் பெரிய வெள்ளிக் கிழமையை உயிர்த்த ஞாயிறாக உருமாற்றும் ஒரே வழியாகும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அதிகாரிகள்அதிசயிக்கும்படிநடந்துக்கொள்வீர்கள்.

**கடகம்**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**தனுசு**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து விலகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

# புளியம்பொக்கணையில் 85 கிலோ கஞ்சா பறிமுதல்

**அதிரடி படை, பொலிஸார் இணைந்து நடவடிக்கை**



கிளிநொச்சி, ஏப். 18

கிளிநொச்சி, புளியம்பொக்கணை பகுதியில் 85 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக விசேட அதிரடிப் படையினர் மற்றும் கிளிநொச்சி பொலிஸார் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

புளியம்பொக்கணை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 85 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகித்து பளை பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் பகுதியில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று அங்கிருந்து கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-05)

# காரைநகர் கடலில் மூழ்கிய குடும்பஸ்தரை காப்பாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 18

காரைநகர் கடலில் குளித்துக் கொண்டிருந்து 44 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் திடீரென நீரில் மூழ்கியுள்ளார். இதன் போது, விரைந்து செயல்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரைக் காப்பாற்றினர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து ஒரு குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்தனர். இவ்வாறு வந்த அவர்கள் காரைநகர் கடலில் நேற்று முன்தினம் நீராடிக் கொண்டிருந்தவேளை குறித்த குடும்பஸ்தர் திடீரென நீரில் மூழ்கியுள்ளார்.

இதன்போது, விரைந்து செயல்பட்ட உயிர் காக்கும் பொலிஸாரான வினோதன் மற்றும் வேரகொட ஆகியோர் அவரை கடலிலிருந்து மீட்டு முதலுதவி அளித்தனர். பின்னர் குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-05)

# குருநகர் கடற்கரைப் பகுதியில் ரி -56 ரக துப்பாக்கி கைப்பற்றல்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணம் - குருநகர் கடற்கரைப் பகுதியில் ரி - 56 ரக துப்பாக்கியொன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நடத்தப்பட்ட சோதனையில் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கி பாவிக்கக் கூடிய நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

# வவுனியாவில் பாடசாலைகள் மட்ட உதைபந்தாட்ட போட்டி ஆரம்பம்



வவுனியா, ஏப். 18

வவுனியா மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் அமரர் சௌந்தரநாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

சங்கத்தின் இணைப்பாளர் இ. சற்சொரூபன் தலைமையில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா உதவி மாவட்ட செயலாளர் ம. சபர்ஜா கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. ஞானராஜ், ஆசிரிய ஆலோசகர் யூட் பரதமாறன், ஓய்வுநிலை உடற்கல்வி ஆசிரியை சாந்தினி சேவியர், விளையாட்டு வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 16 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் உதைபந்தாட்ட அணிகள் பங்கேற்றுள்ளன. (எ-10)

# சைவப்புலவர் சங்க நிர்வாக சபைக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 18

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் தி. கா. கமலநாதன் தலைமையில் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்குரிய சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள், பட்டமளிப்பு விழா, சைவநாதம் மலர் வெளியீடு, சைவமாநாடு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதனால் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் செ. த. குமரன் அறிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் வரிகளால் இலங்கைக்கு அதிக பாதிப்பு

## ஃபிட்ச் மதிப்பீடுகள் கூறுகின்றன

கொழும்பு, ஏப். 18

**அமெரிக்க வரிகள் அதிகரிக்கப்பட்டிருப்பது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள பல இறையாண்மை நாடுகளின் கடன் அளவீடுகளை பாதிக்கும் என்று ஃபிட்ச் மதிப்பீடுகள் கூறுகின்றன.**

அமெரிக்கா அரசாங்கம் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நாடு சார்ந்த பரஸ்பர வரிகள் இறுதியில் செயல்படுத்தப்படும்போது இலங்கை பாதிக்கப்படும் நாடுகளில் ஒன்றாக இருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்றுமதிகள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த முதலீடுகள் சுங்கவரிகளாலும், அதிக நிச்சயமற்ற தன்மையாலும் பாதிக்கப்படுவதால் ஆசிய பொருளாதார வளர்ச்சி மெதுவாகும் என்று ஃபிட்ச் மதிப்பீடுகள் குறிப்பிட்டுள்ளன.

வர்த்தகப் போருக்கு பிராந்திய அரசாங்கங்களின் கொள கைப் பதில்கள் ஆசிய-பசிபிக் இறையாண்மை மதிப் பீடுகளில் அதன் தாக்கத்திற்கு முக்கியமாக இருக்கும் என்றும் ஃபிட்ச் மதிப்பீடுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

ஃபிட்ச் மதிப்பீடுகள் நிறுவனத்தின்படி, வரி அதிகரிப்பைத் தொடர்ந்து மதிப்பு குறையும் சந்தை அழுத்தத்தை எதிர கொண்டு அதிகாரிகள் தங்கள் நாணயங் களை ஆதரிக்க தலையிட்டால் அந்நிய செலாவணி இருப்புக் கள் குறையக்கூடும்..

பங்களாதேஷ், இலங்கை மற்றும் வியட்நாம் போன்ற இறையாண்மை நாடுகளுக்கு, குறிப்பாக அவர்களின் ஏற்றுமதி வருவாய் பாதிக்கப்பட்டால், கடன் எதிர்மறையாக இருக்கலாம் என்று ஃபிட்ச் மதிப்பீடுகள் மேலும் தெரி வித்துள்ளன. (அ)

# வெலிக்கடைச் சம்பவம்
## உயிரிழந்த இளைஞனின் சடலத்தை தோண்டி எடுக்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஏப். 18

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் மரணித்த நிமேஷ் சத்சாரவின் உடலைப் பிரேதப் பரிசோதனைக்காக 23ஆம் திகதி மீண்டும் தோண்டி எடுக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இம்மாதம் 23 ஆம் திகதி பிரேத பரிசோதனைக்காக உடலைத் தோண்டி எடுக்கக் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அனுமதி கோரியதாகக் குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து, கொழும்பு மேலதிக நீதவான் மொஹமட் ரிஸ்வான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். நிமேஷ் சத்சாரவின் உடலைத் தோண்டி எடுக்கும் போது, அதற்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பதுளை நீதவானிடம் தெரிவித்தார். (அ)

# வழுக்கு மரம் ஏறும் போட்டியில் பங்குபற்றிய சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 18

எல்பிடிய - பிடிகல பகுதியில் புதுவருடத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வழுக்கு மரம் ஏறும் போட்டியில் பங்குபற்றிய சிறுவன் ஒருவன் உயிரிழந்தான் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை குறித்த பகுதி மக்களால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டபோதே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுவன் வழுக்கு மரம் ஏறும்போது அதிலிருந்து தவறி வீழ்ந்து காயமடைந்த நிலையில், எல்பிடிய வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்தார். (அ)

# துப்பாக்கிகளுடன் மூன்று பேர் கைது

கொழும்பு, ஏப். 18

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகளுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பொலிஸ் பிரிவில் இடைக்குறிச்சி பகுதியில் உள்நாட்டு துப்பாக்கியுடன் 64 வயது நபர் கைது செய்யப்பட்டார்.

இதேபோன்று, கொபேகனே பொலிஸ் பிரிவில் உள்நாட்டு துப்பாக்கியுடன் 45 வயது நபரும், தெலிகட பொலிஸ் பிரிவில் 1 வெளிநாட்டு துப்பாக்கி, 6 தோட்டாக்கள், வெடி மருந்து ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்களுடன் 39 வயது நபரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 18

கொழும்பு தேசிய மருத்துவமனை உட்பட நாடு முழுவதும் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுவதாக தெரியவருகின்றது.

நீரிழிவு நோயாளிகளுக்கு செலுத்தப்படும் இன்சுலின் தேசிய மருத்துவமனை கிளினிக்கில் உள்ள நோயாளிகளுக்குக்கூட வழங்கப்படுவதில்லை என்றும்,

நாடு முழுவதும் உள்ள பிற மருத்துவமனைகளில் சுமார் மூன்று மாதங்களாக இன்சுலின் உட்பட பல அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் இருப்பதாகவும் நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், மருத்துவ விநியோகத்துறையிலும் அரச மருத்துவமனைகளிலும் 13 உயிர்காக்கும் மருந்துகளில் மூன்று முற்றிலும் கையிருப்பில் இல்லை என்றும்,

மருத்துவ விநியோகத் துறையில் 460 அத்தியாவசிய மருந்துகளில் 183 மருந்துகளும், 49 மருத்துவமனைகளிலும் முழுமையாக மருந்துகள் கையிருப்பில் இல்லை என்றும் சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

மருந்துகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யத் தவறியதால் எழும் அவசரத் தேவை, பதிவு செய்யப்படாத, தரமற்ற மற்றும் போலியான மருந்துகளை இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்று ரவி குமுதேஷ் மேலும் கூறினார். (அ)

# பஸ் சேவைகள் தொடர்பில் 143 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஏப். 18

புத்தாண்டு காலத்தில் இயக்கப்படும் பஸ் சேவைகள் தொடர்பாக 143 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதிக கட்டணம் வசூலித்தல், பயணிகளை மரியாதை குறைவாக நடத்துதல், வேகமாக பஸ்களை இயக்குதல் போன்றவை தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த அனைத்து முறைப்பாடுகள் மீதான விசாரணையும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், 1955 என்ற துரித எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களுக்கு தீங்கு விளைவிக்காத கிருமிநாசினிகளை வழங்குவோம்

## அமைச்சர் லால் காந்த கூறுகிறார்

கொழும்பு, ஏப். 18

மக்களின் பாவனைக்கு உதவக்கூடிய தீங்கு விளைவிக்காத இரசாயன கிருமி நாசினிகளை எதிர்காலத்தில் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாயம் மற்றும் கால்நடை காணி அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விவசாய நடவடிக்கைகளுக்காக கடந்த காலங்களில் கடந்தகால அரசாங்கத்தினால் இறக்குமதிசெய்யப்பட்ட, தயாரிக்கப்பட்ட பயனற்ற மருந்துவகைகள் இருக்கின்றமை எங்களுக்கு தெரியும்.

அதற்காக நாங்கள் இரசாயன கூட்டுத்தா பனம், விவசாய திணைக்களம் உள்ளிட்ட திணைக்களத்துடன் கலந்தாலோசித்துள்ளோம்.

எதிர்காலத்தில் பொருத்தமான கிருமிநாசினிகளை வழங்கக்கூடியதாக இருக்கும். அந்தவகையில் மக்களின் பாவனைக்கு உதவக்கூடிய தீங்கு விளைவிக்காத இரசாயன கிருமி நாசினிகளை எதிர் காலத்தில் வழங்க தீர்மானித்துள்ளோம்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலப்பகுதியில் மக்களிடம் இருந்த காணி பத்திரங்கள் உறுமய என்ற செயற்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு அவர்களுக்கு உறுதி வழங்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பல்வேறு பிரச்னைகள் திணைக்களங்கள் ரீதியாக காணப்படுகின்றன. அந்தந்த திணைக்களங்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதற்கு இப்போதுதான் ஆரம்பித்துள்ளோம்-என்றார்.

# கனடாவில் பாலியல் வன்கொடுமை இலங்கைத் தமிழரான பிரவீன் கைது

ரொறன்ரோ, ஏப். 18

கனடாவின் பிக்கரிங் மற்றும் மார்க்கமில் உள்ள வீடுகளில் மதப் பிரசாரங்களை நடத்திய ரொறன்ரோ நபர் கைது செய்யப்பட்டு அவர் மீது ஏழு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக யோர்க் பிராந்திய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகளில் பல ஆண்டுகளாக இடம்பெற்றதாக கூறப்படும் பாலியல் வன்கொடுமைகளின் சூத்திரதாரியாக இலங்கைத் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைத் தமிழ்பூர்வீகத்தைச் சேர்ந்த 44 வயதான மதப்பிரசாரகர் மற்றும் மதக்கற்கைளை வழங்கும் நபரான பிரவீன் ரஞ்சன் என்பவர் மீதே யோர்க் பிராந்திய பொலிஸார் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர்.

சந்தேக நபர், இரண்டு கிரேட்டர் ரொறன்ரோ பகுதி [illegible] புகளில் வைத்து "ஆன்மீக ஆய்வு அமர்வுகள்" என்ற போர்வையில் பாதிக்கப்பட்டவர்களை பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த 2021 ஜனவரி மாதம் முதல் 2024 ஆண்டுவரை, பிக்கரிங் மற்றும் மார்க்கம் பகுதிகளில் இவர் நடத்திய ஆன்மீகக் கற்கை அமர்வுகளின் போது ஒருவர் ஆறு முறை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

அதேபோல கடந்த டிசெம்பரில் இன்னொருவர் இவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட இவர் மீதான வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்மீது பாலியல் வன்முறை முறையீடுகளை வழங்கிய இரண்டு முறைப்பாட்டாளர்களின் அடையாளங்களை வெளியிட நீதிமன்றம் தடைவிதித்துள்ளதால் இந்த முறைப்பாட்டாளர்கள் விவரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

இதற்கிடையே சந்தேக நபரான பிரவீன் ரஞ்சனின் நிழற்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸார் இவரது பாலியல் முறைகேடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் பலர் இருக்கலாம் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, "விசாரணையாளர்கள் இன்னும் பல பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என்று நம்புகிறார்கள்.

மேலும் தகவல் தெரிந்தவர்கள் யோர்க் பிராந்திய பொலிஸ் சிறப்பு பாதிக்கப்பட்டவர்கள் பிரி வைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வாறாக பாதிக்கப்பட்டவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் தாமாக முன்வந்து தகவல்களை வழங்கவேண்டும் எனவும் அவ்வாறு வழங்கப்படும் விவரங்களின் இரகசியம் பாதுகாப்படும் எனவும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிவேக நெடுஞ்சாலையில் வாகனம் செலுத்திய சிறுவன்



கொழும்பு, ஏப். 18

இலங்கையின் தெற்கு அதிவேக வீதியில் சிறுவன் ஒருவர் வாகனம் ஓட்டும் காணொளிக் காட்சிகள் வெளியாகியுள்ளன.

அந்தச் சிறுவன், சாரதியின் மடியில் அமர்ந்து வாகனத்தை ஓட்டுவது இந்த காணொளியில் காட்டப்படுகிறது.

இந்த காணொளிக்காட்சிகளை, அதே வீதியில் பயணித்த வாகன சாரதி ஒருவர் படம் பிடித்துள்ளார்.

இந்நிலையில், அதிவேக வீதியில் இந்த சம்பவம் இடம்பெற்ற சரியான இடம் தெரியவராத நிலையில், இது தொடர்பில் சமூக ஆர்வளர்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

(அ)

# அரசியலமைப்பின் பிரகாரமே ஆட்சியாளர் நடக்கவேண்டும்!

### ஐக்கிய தேசிய கட்சி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 18

**உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எந்த கட்சி அதிகாரத்தை பெற்றாலும் அந்த உள்ளூராட்சி மன்றங்களை போசித்து பாதுகாப்பது ஆளும் அரசாங்கத்தின் உரிமையாகும். ஆட்சியாளர்கள் அரசியலமைப்பின் பிரகாரமே செயற்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறுவதற்கு ஒரு மாத காலத்துக்கும் குறைவான நாட்களே இருக்கின்றன. தேர்தலுக்கு முகம்கொடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி மிகவும் உறுதியுடன் செயற்பட்டு வருகிறது.

என்றாலும் இந்த முறை தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையை விட அளிக்கப்படாத வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என நினைக்கிறோம்.

அதேபோன்று ஆளும் கட்சிக்கு வாக்களிக்காத அனைத்து வாக்குகளையும் ஐக்கிய தேசிய கட்சிக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

கடந்த காலத்தை எடுத்துக்கொண்டால், நாட்டுக்குள் பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னுக்கு வந்து, நாட்டின் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டு, பொருளாதார நெருக்கடி நிலைமையை முகாமைத்துவம் செய்து, நாட்டை முன்னெடுத்துச் சென்றது ஐக்கிய தேசிய கட்சியாகும்.

அந்த விடயங்களை இலங்கை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என நினைக்கிறேன்.

பலரும் வெளியில் வந்து பல்வேறு கதைகளை சொல்லலாம். என்றாலும் ஒவ்வொருவரும் இதன் உண்மை நிலையை நன்கு தெரிந்துள்ளார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

அதேபோன்று உளளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆளும் கட்சியினால் பல்வேறு கதைகள் சொல்லப்பட்டு வருகின்றன. ஆனால் அவர்கள் தெரிவிப்பது போல் நாடொன்றை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

ஏனெனில் நாங்கள் 2015இல் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டு 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்குச் சென்றபோது ஐக்கிய தேசிய கட்சியாக தோல்வியடைந்தோம். அப்போது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சராக நானே இருந்தேன்.

என்றாலும் உள்ளூராட்சி மன்றங்கள் எந்த கட்சிக்கு உரித்தாக இருந்தாலும், அதனை போசிப்பது மற்றும் பொது மக்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் உரிமையாகும். அதன் பிரகாரம் ஆட்சியாளர்கள் அரசியலமைப்பின் பிரகாரமே செயற்படவேண்டி இருக்கிறது.

விசேடமாக இலங்கையின் 1948, 1977 காலப்பகுதிகளை எடுத்துக்கொண்டால், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தின் கீழே இலங்கை ஒற்றையாட்சியாக, பலமான அரசாங்கமாக, ஆசியாவிலே பலமான அரசாங்கமாக, சர்வதேசத்தில பலமான அரசாங்கமாக, இலங்கை சுயாதீன அரசாக செயற்பட்டிருக்கிறது.

அதனால் ஒரு பக்கத்தில் ஐக்கிய தேசிய கட்சி அரசியல் கட்சிகளை உருவாக்குகின்ற கட்சியாகும்.

அதனால் ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்தும் உறுதியாக முன்னுக்குச் செல்லும்-என்றார்.

(அ)

# கடன் அட்டைகளின் பாவனை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 18

இலங்கையில் கடன் அட்டைகளின் பாவனை 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் 2,018,996 ஆக இருந்த கடன் அட்டைகளின் பயன்பாடு பெப்ரவரி மாதம் 2,020,766 ஆக அதிகரித்துள்ளது.

இது 0.1 வீத அதிகரிப்பாகும்.

அத்துடன் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் பாவனையிலுள்ள கடன் அட்டைகள் 0.6 வீதம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

(அ)

# இஸ்ரேல் தொழில் வேலைத்திட்டத்தில் முன்னாள் அரசியல்வாதிகள் மோசடி!

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தலைவர்



கொழும்பு, ஏப். 18

இஸ்ரேல் தொழில் வேலைத்திட்டத்தில் முன்னாள் அரசியல்வாதிகள் மற்றும் சில நபர்கள் பல்வேறு ஊழல் மோசடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேநேரம் சில சமூக ஊடகங்கள் பொய் செய்திகளை பிரசாரம் செய்து அரசாங்கத்துக்கும் அரச அதிகாரிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றன.

இந்த அனைத்து சவால்களுக்கும் முகம்கொடுத்து, நாட்டை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சியை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோஷல விக்ரமசிங்க தெரிவித்தார்.

இஸ்ரேலில் ஹோட்டல் துறையில் தொழில் வாய்ப்பு பெற்ற இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு விமான பட்டுச்சீட்டு வழங்கும் நிகழ்வு பணியகத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இஸ்ரேல் நாட்டில் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாங்கள் முயற்சித்து வருகிறோம்.

என்றாலும் இந்த விடயத்திலும் இன்னும் சில முரண்பாடான நிலைமைகள் இருந்து வருகின்றன.

இஸ்ரேல் தொழில் வேலைத்திட்டத்தில் கடந்த காலங்களில் பல்வேறு மோசடிகள் பல இடம்பெற்றுள்ளன.

தகுதியற்ற நபர்களை அந்த தொழிலுக்கு அனுப்பியதன் காரணமாக அவர்கள் தொழில் நிலையங்களில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களுக்கு பணி புரிவதற்கு அனுபவம் இல்லாமையால் இந்த முரண் பாடான நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு தொழில்துறையை முன்னேற்றுவதற்கு பணியகம் எந்தளவு முயற்சித்தாலும் இந்த தொழில் துறையின் முன்னேற்றம் வெளிநாட்டு தொழிலுக்கும் செல்பவர்களின் செயற்பாட்டிலேயே தங்கியிருக்கிறது.

தகுதியான குழுவொன்றைத் தெரிவு செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கத் தவறியதால் சில தொழில்வாய்ப்புக்கள் நாட்டுக்கு இல்லாமல் போயிருக்கின்றன.

அதனால் எதிர்காலத்தில் இஸ்ரேலில் விவசாயதுறைக்காக தொழிலாளர்களை தெரிவு செய்யும்போது மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் அனைவருக்கும் சமமான முறையில் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

புதிய மறுசீரமைப்பு மற்றும் புதிய வேலைத்திட்டங்களை செயற்படுத்தி, இஸ்ரேலில் விவசாயத்துறையில் மீண்டும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முயற்சித்து வருகிறோம்-என்றார். (அ)

# இஸ்ரேலின் முகவராக மாறியுள்ள அநுர அரசு!

கொழும்பு, ஏப். 18

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது இஸ்ரேலின் முகவராக மாறியிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கிழக்கு மாகாணங்களில் அரசியல் கூட்டங்களுக்குச் செல்லும் போது சற்று கலவரமடைகின்றார். பலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஸ்ரிக்கர் ஒட்டியமை தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட இளைஞர் எந்தவொரு பயங்கரவாத செயற்பாடுகளுடனும் தொடர்பற்றவர் என்று ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். ஆனால் அதற்கு முரணான கருத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

எனினும் அந்த இளைஞன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு நிபந்தனைகளின் அடிப்படையில் ஜனாதிபதி கையெழுத்திட்ட பின்னரே அவர் விடுவிக்கப்பட்டார்.

குறித்த இளைஞனுக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் எந்த தொடர்பும் இல்லை எனில் எதற்காக வாராந்தம் குற்றத்தடுப்புப் பிரிவில் கையெழுத்திடுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது?

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பலஸ்தீனுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்ட தேசிய மக்கள் சக்தி இன்று அது தொடர்பில் மௌனம் காக்கிறது.

ஆனால் அக்கறைப்பற்று போன்ற பிரதேசங்களில் விஸா இன்றி இஸ்ரேலியர்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவது குறித்து இந்த அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கொழும்பில் சட்ட விரோதமாக மத வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையா? ஜனாதிபதியின் கூற்றுப்படி பலஸ்தீனுக்கு ஆதரவாக செயற்படுவது மாத்திரமே தற்போது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த ஒரு வழக்கிலும் முன்னிலையாகாத கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணி



## கிண்டலடிக்கின்றது அநுர அரசு

கொழும்பு, ஏப். 18

**கடந்த காலங்களில் இந்த நாட்டில் நடந்த மோசடி, ஊழல், கொலைகள் மற்றும் அரசியல் தவறுகளின் தீவிரம் வெளிச்சம் போட்டுக் காட்டப்படும் நேரத்தில், கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக மாறிவிட்டார் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர், அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறுகிறார்.**

நடந்த சில கொலைகள் வெறும் அரசியல் படுகொலைகள் அல்ல, மாறாக சதித்திட்டங்கள் என்றும், சிக்கலான நூல் பந்து இப்போது படிப்படியாக அவிழ்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவிக்கையில்-இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மீண்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மறைக்கப்பட்ட கோப்புகள் குறித்து இப்போது விசாரணைகள் நடந்து வருகின்றன. வழக்குகள் தொடரப்படுகின்றன. குற்றப் புலனாய்வுத் துறையும் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளது.

குற்றப் பத்திரிகைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக தாக்கல் செய்யப்படுகின்றன.

இந்த வழியில், சட்டத்தால் தேவைப்படும் பணிகள் தொடர்புடைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை மட்டுமே அரசாங்கம் வழங்குகிறது.

மோசடி, ஊழல், கொலை மற்றும் அரசியல் குற்றங்கள் மிகவும் கடுமையானவை, அவை ஒரு வலையமைப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக மாறியுள்ளார்.

இந்த நாட்டில் எந்த ஒரு வழக்கிலும் கம்மன்பில சட்டத்தரணியாக முன்னிலையானதை நம் நாட்டு மக்கள் பார்க்கவில்லை.

ஆனால் பிள்ளை யான் தனது சட்டத்தரணியாக கம்மன்பிலவைத் தேர்ந்தெடுத்துள்ளார். மேலும், பிள்ளையான் சம்பந்தப்பட்ட வழக்கை கம்மன்பில எடுத்துக்கொண்டார்.

இவை வெறும் அரசியல் படுகொலைகள் அல்ல, மாறாக சதித்திட்டங்கள் என்பதை நாம் காண்கிறோம். அந்த நூல் பந்து அவிழ்ந்து வருகிறது.

பழைய மோசடி மற்றும் ஊழல் தொடர்பாக பல நிறுவனங்களுக்கு பதிலளிக்க வேண்டிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இன்னும் சுகாதார அமைச்சில் உள்ளனர். மருந்துகளில் ஏதேனும் சிக்கல் இருந்தால், அது 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மருந்துகளை முறையற்ற முறையில் கொள்வனவு செய்ததால் ஏற்பட்ட ஒரு பிரச்னையாகும்.

சரிந்து போன சுகாதாரத் துறையை நாங்கள் மீட்டெடுக்கிறோம். இன்னும் சில மாதங்களில், மக்கள் எதிர்பார்க்கும் விதத்தில் சுகாதார சேவைகளை வழங்க முடியும். பகட்டான தீர்வு களுக்குப் பதிலாக நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாம் சுகாதாரத் துறையை கட்டியெழுப்ப வேண்டும்-என்றார். (அ)

# திரவப் பால், தயிர் ஆகியவற்றுக்கு வற் வரியிலிருந்து விலக்கு அளிப்பு

கொழும்பு, ஏப். 18

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டத்தின்படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் தயிர் ஆகியவற்றுக்கு வற் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் திரவ பால் மற்றும் தயிர் மீதான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெறுமதி சேர் வரி திருத்த சட்டமூலம் ஏப்ரல் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன ஏப்ரல் 11 ஆம் திகதி அதற்கு ஒப்புதல் அளித்தார்.

அதன்படி, தொடர்புடைய சட்டம் அந்தத் திகதியில் அமலுக்கு வந்ததிலிருந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பல வரித் திருத்தங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

திரவ பால் மற்றும் தயிர் தவிர, இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தால் மின்சார உற்பத்திக்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படும் நாப்தா மீதான வற் வரியும் நீக்கப்பட்டுள்ளதாக இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டத்தின் படி, வெளிநாடு வாழ் தனிநபர்கள் வழங்கும் டிஜிற்றல் சேவைகளுக்கு வற் வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில், இலங்கையில் வசிக்காத தனிநபர்கள் மின்னணு தளங்கள் மூலம் தனிநபர்களுக்கு வழங்கும் சேவைகளுக்கு வற் வரி பொருந்தும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வணிக நோக்கங்களுக்காக பொருட்களை இறக்குமதி செய்யும் அல்லது ஏற்றுமதி செய்யும் அனைத்து நபர்களும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

# பாணந்துறை கடற்கரையில் நீராடிய இரு சிறுவர் மாயம்!

கொழும்பு, ஏப். 18

பாணந்துறை கடற்கரைக்கு நண்பர்கள் மற்றும் உறவினர்கள் குழுவுடன் நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கிக் காணாமற் போயுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை 5.30 மணியளவில் பண்டாரகம மற்றும் வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், பாணந்துறை கடற்கரைக்கு சுற்றுலா சென்றிருந்தவேளையில், அங்கு நீராடிக்கொண்டிருந்த போது, ஏற்பட்ட பேரலையில் சிக்கி ஐந்து பேர் நீரில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது குறித்த பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த பாணந்துறை கடலோரக் கடற்படை மற்றும் உயிர்காக்கும் பிரிவினர் இணைந்து மூன்று பேரை மீட்டனர். எனினும் இரு சிறுவர்களை அவர்களால் மீட்க முடிய வில்லை. இந்நிலையில் குறித்த இரு சிறுவர்களையும் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஸ்-ஓட்டோ மோதி விபத்து!

கொழும்பு, ஏப். 18

ஹட்டன்-மஸ்கெலியா பிரதான வீதியில் டிக்கோயா நகருக்கு அருகில் ஓட்டோ ஒன்று பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்தவர்கள் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், விபத்தின் போது விபத்துக்குள்ளான ஓட்டோச் சாரதி அதிக மதுபோதையில் இருந்ததாக தெரியவந்துள்ளது.

குறித்த ஓட்டோச் சாரதி ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# உலகில் அதிகளவு சிறுத்தைகள் கொண்ட இடமாக குமண பூங்கா!




கொழும்பு, ஏப். 18

உலகில் அதிக சிறுத்தைகள் வாழும் காடுகளில் பட்டியலில் இலங்கையின் குமண தேசிய பூங்கா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதாக சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையைச் சேர்ந்த வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் குழு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

குமண தேசிய பூங்காவில் நூறு சதுர கிலோமீற்றர் பரப்பளவில் சுமார் 41 சிறுத்தைகள் வாழ்வதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஆய்வில் சிறுத்தைகளின் எண்ணிக்கை அடர்த்திக்கு மேலதிகமாக ஆராய்ச்சியாளர்கள் அவற்றின் இடம் சார்ந்த பரவல் மற்றும் செயல்பாட்டு முறைகளிலும் அவதானம் செலுத்தியுள்ளனர்.

இலங்கையின் காடுகளில் வாழும் மிகப்பெரிய சிறுத்தை இனமான பாந்தறா பார்டுஸ் கொட்டி , நாட்டில் மிகவும் அழிந்து வரும் ஒரு உயிரினமாக இருப்பதால், இந்த ஆராய்ச்சித் தரவு பாதுகாப்பாளர்களுக்கு அவர்களின் பாதுகாப்பு முயற்சிகளில் உதவியாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (அ)

# உர மானியம் கிடைக்காததால் விவசாயிகள் கடும் சிரமத்தில்!

கொழும்பு, ஏப். 18

சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான உர மானியம் தாமதமாகி வருவதால், விவசாயிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக உர மானியத்தை விரைவில் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை உள்ளிட்ட பகுதியில் உள்ள விவசாயிகள் தற்போது சிறுபோகத்திற்கான நெற்செய்கையினை ஆரம்பித்துள்ளனர்.

அறுவடை செய்வதற்கு சுமார் 10 முதல் 15 நாட்கள் ஆகும் எனவும், இந்த கால கட்டத்தில் யூரியா உரத்தினை இடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் புலனாய்வுத்துறை

## ரொஹான் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 18

ஏப்ரல் 21 தாக்குதல்களின் பின்னணியில் நாட்டின் புலனாய்வுத்துறையினர் இருப்பது தெரியவந்துள்ளதாக சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டின் புலனாய்வுத்துறையினர் ஏப்ரல் 21 தாக்குதல்களின் பின்னணியில் இருக்கின்றார்கள். தாக்குதல்களை மேற்கொண்டவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணினார்கள் என்பது விசாரணை அறிக்கைகள் ஊடாக எமக்குத் தெரியவந்துள்ளது.

தாக்குத லின் பின்னணியிலிருந்த பிர தான சூத்திரதாரி யார் என்பதை அடையாளம் காண முடியாதளவிலேயே நாட்டின் பாதுகாப்புத்துறை காணப்படுவதாக ரொஹான் சில்வா கூறினார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தல்; 18 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, ஏப். 18

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் கடந்த மார்ச் 03 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை 18 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காலகட்டத்தில் 62 கட்சி ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 14 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில், தேர்தல் தொடர்பான 38 குற்றவியல் முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியதாக 138 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண அதிகாரத்தை கைப்பற்ற உள்ளூராட்சி சபைகள் அவசியம்!

## ஹிஸ்புல்லா எம். பி. சொல்கிறார்



மட்டக்களப்பு, ஏப். 18

**"அரசியலிலேயே உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் முக்கியமானதொன்றாக காணப்படுகிறது. அதைக் கைப்பற்றுகின்ற போதுதான் எதிர்காலங்களில் மாகாண சபை மற்றும் பாராளுமன்றம் போன்ற அதிகாரங்களை கைப்பற்ற முடியும்"- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சஹ்ரானை ஆதரித்து நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பில் மக்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில், அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ஹிஸ்புல்லா கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

எதிர்காலத்தில் எங்களுடைய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்பதோடு உச்ச அதிகாரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்காக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். எனவே, நீங்கள் அனைவரும் இந்தத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்த வேண்டும்.- என்றார். (எ)



# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி கிளை காரியாலயங்கள் திறப்பு

பொத்துவில், ஏப். 18

அம்பாறை - பொத்துவில் பிரதேச சபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிக்கிளை காரியாலயங்களை அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் திறந்து வைத்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொத்துவில் பிரதேச மத்திய குழுத் தலைவர் ஏ. எம். எம். இஸ்ஸதீன் தலைமையில் வேட்பாளர்களின் கட்சிக் கிளை காரியாலய திறப்பும் மக்கள் சந்திப்பும் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர்கள், பொத்துவில் பிரதேச மத்திய முழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உதுமாலெப்பை எம். பி. கட்சியை அழிக்கிறார்!

அட்டாளைச்சேனை , ஏப். 18

முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளை 20 வருடங்களாக துன்புறுத்தி வந்த முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பையை மன்னித்து, முஸ்லிம் காங்கிரஸுக்குள் எடுத்து, அவரை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக்கிய பின்னரும், முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளுக்கு எதிரான அவரின் அட்டகாசங்களும் வன்முறைகளும் இன்னும் குறைவடையவில்லை என்று அந்தக் கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழுத் தலைவர் ஏ. ஹலீம் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து நடத்திய கூட்டமொன்றில், தன்னையும் கட்சியின் மூத்த போராளிகளையும் தரக்குறைவான வார்த்தையில் உதுமாலெப்பை எம். பி. பேசியதோடு, அந்த இடத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளுக்கு எதிராக வன்முறையைக் கையில் எடுத்ததாகவும் ஹலீம் குற்றஞ்சாட்டினார்.

இந்த விவகாரத்தை கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தான் தெரியப்படுத்தியுள்ளதாகவும் ஹலீம் குறிப்பிட்டார். (எ- 06)

# அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு: பழக்கடை உரிமையாளருக்குப் பிணை

கல்முனை, ஏப். 18

அரச அதிகாரியின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய பழக்கடை உரிமையாளர் பிணையில் செல்ல கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பழக்கடைகளின் நிலைமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றுக்கமைய நேற்று முன்தினம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினர், பிரதான வீதியில் உள்ள பழக்கடைக்கு திடீர் பரிசோதனை மேற்கொள்வதற்காக சென்றனர்.

இதன்போது, அந்த பழக்கடையின் உரிமையாளர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட நபர் தனது கடையை பரிசோதனை செய்ய வேண்டாம் எனத் தடுத்ததுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சாய்ந்தமருது பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதுடன் பொலிஸாரின் உதவியுடன் கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு பின்னர் குறித்த பழக்கடை உரிமையாளருக்கு எதிராக அன்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது குறித்த பழக்கடை உரிமையாளர் ஓர் இலட்சம் ரூபாய் சரீர பிணையில் கல்முனை நீதிவான் நீதிமன்று விடுவித்துள்ளதுடன் எதிர்வரும் மே 19ஆம் திகதி வழக்கு மறுதவணையிடப்பட்டுள்ளது.

இந்த பழக்கடையை மீள்பரிசோதனை செய்து ஏதேனும் குறைபாடுகள் மற்றும் சுகாதார சீர்கேடுகள் காணப்படும் பட்சத்தில் கல்முனை நீதிவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ- 01)

# தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி

நிந்தவூர், ஏப். 18

அம்பாறை மாவட்டம் நிந்தவூரில் தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

இன்றைய காலகட்டத்தில் தொற்று நோய் மூலம் நிகழும் மரணங்களை விட தொற்றா நோய்கள் மூலம் நிகழும் இழப்புக்களும் மரணங்களும் அதிகரித்து வருகின்றன. தொற்றா நோய்கள் மூலம் நிகழும் இறப்புக்களாலும் பொருளாதார இழப்புக்களிலிருந்தும் மீள முடியாமல் பல குடும்பங்கள் தவிக்கின்றன.



மக்களிடையே தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வும் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இந்த நிலையில், தொற்றா நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க விழிப்புணர்வு ஊட்டும் முகமாக நேற்று நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி ஜே. சிவசுப்பிரமணியம் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஏற்பாட்டில் நிந்தவூர் 11 ஆம் பிரிவு மக்களுக்கு தொற்றா நோய் சம்பந்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வு நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது, "ஆரோக்கியமான உணவு - ஆரோக்கியமான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளில் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் நிந்தவூர் 11ஆம் பிரிவைச் சேர்ந்த மகளிர் சங்க உறுப்பினர்கள் நடைபவனியை மேற்கொண்டனர். ஜின்னா பள்ளிவாசல் வீதியில் ஆரம்பித்து நிந்தவூர் பிரதேச செயலகம் வரை சென்ற இந்த நடைபவனியில் பிரதேச செயலக ஊழியர்களும் இணைந்து கொண்டனர். (எ-06)

# கட்சிகள் இடையே மோதல் கைதான 6 பேருக்கு பிணை

சம்மாந்துறை, ஏப். 18

தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது இரு கட்சிகளுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் சம்பந்தப்பட்ட 6 சந்தேக நபர்களை பிணையில் செல்ல சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியான நாய்குட்டியர் சந்திப் பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் பலர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வட்டார வேட்பாளர் உட்பட ஆறு பேர் சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 6 பேரும் நேற்று முன்தினம் புதன்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது சந்தேக நபர்களை தலா 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு மறுதவணையை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஒத்திவைத்தார்.

கடந்த 15 ஆம் திகதி இரவு குறித்த மோதல் சம்பவம் இடம்பெற்றிருந்ததுடன் காயமடைந்து சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த தேசிய காங்கிரஸின் வீரமுனை வட்டார வேட்பாளர் எம்.சஹீலை அந்தக் கட்சியின் தலைவர் எம். அதாவுல்லா பார்வையிட்டு ஆறுதல் கூறியிருந்தார்.

சம்பவ தினத்தன்று முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வருகை தந்து சென்ற பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் உட்பட ஆதரவாளர்களால் வீரமுனை வட்டார வேட்பாளர் சஹீல் உட்பட அவரது ஆதரவாளர்கள் தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-01)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


ஈழநாடு



தீவிரமடையும் வர்த்தகப்போர்!

# சீனப் பொருட்கள்மீது 245 வீதம் வரி விதிப்பு

## அமெரிக்கா அதிரடி: முதலீட்டாளர்கள் கலக்கம்





வாஷிங்டன், ஏப். 18

**சீனப் பொருட்கள் மீது 245 சதவீதம் வரி விதித்து அமெரிக்கா அதிரடி காட்டியுள்ளது. இதேவேளை, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை 125 சதவீதமாக சீனா உயர்த்தியது. இதனால், வர்த்தகப்போர் தீவிரமடைந்துள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி, அமெரிக்கப் பொருட்கள் மீது பல்வேறு நாடுகள் அதிக வரி விதிப்பதாகவும், அதற்கு பதிலடியாக அந்தந்த நாடுகளிலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இலங்கை, இந்தியா, சீனா, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீது வரிவிதித்தார். இதனைத் தொடர்ந்து 90 நாட்களுக்கு இந்த வரிவிதிப்பு நிறுத்தி வைக்கப்படுவதாகவும் தனது முடிவிலிருந்து பின்வாங்கினார். இதேவேளை, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரி நீடிக்கும்- என்றார். சீனா மீது கூடுதலாக வரி விதிப்பை அறிவித்தார்.

இதற்கு சீனாவும் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால், இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகப்போர் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 145 சதவீத வரி விதிப்பை ட்ரம்ப் அறிவித்தார். இந்த நடவடிக்கைக்கு பதிலடியாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் கூடுதல் வரியை 125 சதவீதமாக சீனா உயர்த்தியது.

மேலும், அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான "போயிங்" கிடமிருந்து விமானங்கள் வாங்க தங்கள் நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா தடை விதித்தது. மேலும், விமானம் தொடர்பான எந்த கருவிகளையும் அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் எனவும் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா உத்தரவிட்டுள்ளது. இதனால், அமெரிக்கா - சீனா இடையேயான வர்த்தகப்போர் தீவிரமடைந்தது.

இந்த நிலையில், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரியை நேற்று முன்தினம் முதல் 245 சதவீதமாக அமெரிக்கா உயர்த்தியுள்ளது. 145 சதவீதமாக இருந்த வரி தற்போது மேலும் 100 சதவீதம் உயர்த்தப்பட்டு 245 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனால்,, உலக அளவில் பெரும் தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்கு சீனாவும் நிச்சயம் பதிலடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனப் பொருட்கள் மீதான வரி 245 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது என்று அமெரிக்கா அறிவித்த நிலையில் அதன் தாக்கம் இந்திய பங்குச்சந்தையில் நேரடியாக எதிரொலித்துள்ளது. இதனால், முதலீட்டாளர்கள் கலக்கம் அடைந்துள்ளனர். (எ)

# நவால்னி ஆதரவாளர்களுக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறை!

## ரஷ்ய நீதிமன்றம் தீர்ப்பு



மொஸ்கோ, ஏப். 18

எதிர்க்கட்சித் தலைவர் நவால்னியுடன் தொடர்பில் இருந்தவர்களை ரஷ்ய பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்து வருகின்றனர். அவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் நவால்னி. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு எதிராக செயல்பட்டதாகவும் அரசை கவிழ்க்க சதித் திட்டம் தீட்டி வருவதாகவும் இவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து அவரை கைது செய்து சிறையில் அடைத்த நிலையில் சிறையில் மர்மமான முறையில் நவால்னி உயிரிழந்தார். அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக கூறி அவருடைய மனைவி சர்வதேச நீதிமன்றில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், ரஷ்யாவில் நவால்னியுடன் தொடர்பில் இருந்தவர்களை அந்த நாட்டு பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்து வருகின்றனர். அந்த வகையில் மொஸ்கோவில் உள்ள செய்தி நிறுவனத்தில் பணியாற்றி வரும் அன்டோனினா பேவர்ஸ்காயா, செர்ஜி கரேலின், கான்ஸ்டான்டின் கபோவ் மற்றும் ஆர்டெம் க்ரீகர் உள்ளிட்டவர்கள் நவால்னிக்கு ஆதரவாக செயல்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர்கள் மீது தேசத்துரோக வழக்குப் பதியப்பட்டு ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள நீதிமன்றில் நேற்று விசாரிக்கப்பட்டது. விசாரணை முடிவில் அவர்கள் 4 பேருக்கும் ஐந்தரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (எ)

# பாகிஸ்தானில் போர் விமானம் திடீரென விழுந்து நொறுங்கியது

லாகூர், ஏப். 18

பாகிஸ்தானில் போர் விமானம் ஒன்று திடீரென விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் விமானப் படைக்குச் சொந்தமான திங்கி விமானத் தளத்திலிருந்து, மிராஜ் விரோஸ் என்ற போர் விமானம் நேற்று முன்தினம் மாலை புறப்பட்டுச் சென்றது. அந்த விமானத்தில் விமானிகள் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டனர். வெகாரி மாவட்டம் ரட்டா திப்பா பகுதிக்கு மேலே பறந்தபோது விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமானம் கட்டுப்பாட்டை இழந்தது.

சிறிது நேரத்தில் விமானம் அப்பகுதியில் உள்ள வயல் பகுதியில் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. தரையை நோக்கி விமானம் வந்தபோது, விமானிகள் இரண்டு பேரும் வெளியே குதித்து பராசூட் மூலம் தரையிறங்கியதால் உயிர்தப்பினர். (எ)

# இஸ்ரேல் சுற்றுலாப்பயணிகள் மாலைதீவுக்குள் நுழைய தடை

மாலே, ஏப். 18

பலஸ்தீன மக்கள் மீதான தாக்குதல்களுக்கு பல்வேறு உலக நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகள் மாலைதீவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - காஸா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காஸா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்தப் போரில் பலஸ்தீனத்தை சேர்ந்த அப்பாவி பொது மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நீடித்து வரும் போரால் காஸாவில் இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 51 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

பலஸ்தீன மக்கள் மீதான தாக்குதல்களுக்கு பல்வேறு உலக நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், இந்த விவகாரத்தில் இஸ்ரேல் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், இஸ்ரேலியர்கள் சுற்றுலா உள்ளிட்ட காரணங்களுக்கு மாலைதீவுக்குள் நுழையத் தடை விதித்து அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

# சீனாவில் நிலநடுக்கம்

பீஜிங், ஏப். 18

சீனாவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 12. 51 மணியளவில் (இலங்கை நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.1 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. (எ)

# பா.ஜ.கவுடன் கூட்டணி மட்டுமே கூட்டணி ஆட்சி கிடையாது

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் விளக்கம்



சென்னை, ஏப். 18

பா.ஜ.கவுடன் கூட்டணி மட்டுமே வைக்கப்பட்டுள்ளது. கூட்டணி ஆட்சி கிடையாது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

கூட்டணி ஆட்சி என்று மத்திய அமைச்சர் அமித்ஷா கூறவில்லை என்றும் பழனிச்சாமி கூறினார்.

இந்தியாவின் தமிழக சட்டசபை நேற்று முன்தினம் காலை 10. 00 மணியளவில் கூடியது. அப்போது, 3 அமைச்சர்கள் மீது அ.தி.மு.க. கொடுத்த நம்பிக்கையில்லாத தீர்மானத்தை விவாதத்துக்கு எடுக்க வேண்டும் என அ.தி.மு.கவினர் கோரிக்கை விடுத்தனர். மற்ற அலுவல்கள் இருப்பதால், அதை விவாதத்துக்கு எடுக்க முடியாது என சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார். சபாநாயகரின் பதிலை ஏற்க மறுத்து சட்டசபையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அ.தி. மு.க. உறுப்பினர்கள் சட்டசபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இந்த நிலையில், எடப்பாடி பழனிச்சாமி தலைமைச்செயலகத்தில் செய்தியாளர் சந்திப்பில் கூறியவை வருமாறு,

"அ.தி.மு.க. சார்பில் பேரவையில் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தோம். தீர்மானத்துக்கு சபாநாயகர் அனுமதி தர மறுத்ததை கண்டித்து அ.தி.மு.க. வெளிநடப்பு செய்துள்ளது. பா.ஜ.கவுடன் கூட்டணியில் அங்கம் வகிப்போம் என்று கூறினோம். கூட்டணி ஆட்சி என்று கூறவில்லை.

டில்லிக்கு பிரதமர் நரேந்திர மோடி, தமிழ்நாட்டுக்கு எடப்பாடி பழனிச்சாமி என்றுதான் அமித்ஷா கூறினார். தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி என்று அமித்ஷாவும் கூறவில்லை. நாங்கள் யாருடன் கூட்டணி வைத்தால் தி.மு.கவுக்கு ஏன் எரிச்சல்? தி.மு.கவுக்கு பயம். தி.மு.கவை வீழ்த்த வேண்டும் என்பதற்காக ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி"- என்றார்.

தமிழ்நாட்டில் 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. இணைந்து போட்டியிடும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை பெரும் பரபரப்பு சுப்பர் ஓவரில் டில்லி வெற்றி!

## போராடி தோற்றது ராஜஸ்தான்

புதுடில்லி, ஏப். 18

சுப்பர் ஓவரில் ராஜஸ்தான் அணியை வீழ்த்தி டில்லி அணி வெற்றி பெற்றது.

18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இதுவரை 31 லீக் ஆட்டங்கள் முடிந்துள்ளன. இந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற 32ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

இதில், டில்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. கே. எல். ராகுல் 38 ஓட்டங்களிலும், பொரெல் 49 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அக்சர் பட்டேல் 14 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில் டில்லி அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 188 ஓட்டங்கள் எடுத்தது. ராஜஸ்தான் தரப்பில் ஆர்ச்சர் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஜெய்ஸ்வால்-சஞ்சு சாம்சன் ஜோடி அதிரடியாக விளையாடி நல்ல தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தது. இந்த நிலையில், சஞ்சு சாம்சன் 31 ஓட்டங்களில் காயம் காரணமாக வெளியேறினார். அடுத்து வந்த ரியான் பராக் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்த நிலையில், நிதிஷ் ராணாவுடன் ஜெய்ஸ்வால் ஜோடி சேர்ந்தார்.

அரைச்சதம் கடந்த ஜெய்ஸ்வால் 37 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் நிதிஷ் ராணா அதிரடியாக விளையாடி 28 பந்துகளில் 51 ஓட்டங்கள் குவித்தார். இறுதி ஓவரில் 6 பந்துகளில் 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில்,



துருவ் ஜூரேல் - ஹெட்மயர் களத்தில் இருந்தனர்.

கடைசி பந்தில் வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது, மிட்செல் ஸ்டார்க் வீசிய பந்தை எதிர்கொண்ட துருவ் ஜூரேல், 2 ஓட்டங்களுக்காக ஓடியபோது ஆட்டமிழந்தார். இதன்படி, 20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 4 விக்கெட்களை இழந்து 188 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், வெற்றியை தீர்மானிக்க சுப்பர் ஓவர் போட்டி நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணியில் ஹெட்மயர்-ரியான் பராக் களமிறங்கினர். அபாரமாக பந்துவீசிய மிட்செல் ஸ்டார்க், 2 விக்கெட்களை வீழ்த்தினார். ராஜஸ்தான் அணி 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில், 12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி அணி களமிறங்கியது.

டில்லி அணி சார்பில் சுப்பர் ஓவரில் ஸ்டப்ஸ்-கே. எல்.ராகுல் களமிறங்கினர். இந்த ஜோடி 4 பந்துகளில் 12 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து சுப்பர் ஓவரில் ராஜஸ்தான் அணியை வீழ்த்தி டில்லி அணி திரில் வெற்றி பெற்றது. (எ)

# “இது போன்ற போட்டி இனிமேல் வேண்டாம்”



முல்லன்பூர், ஏப். 18

என்னுடைய இதயத்துடிப்பு இப்பொழுதும் அதிகமாக இருக்கிறது. எனவே, இது போன்ற போட்டிகள் இனிமேல் வேண்டாம் என்று பஞ்சாப் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் ரிக்கி பொன்டிங் தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடரில் முல்லன்பூரில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 15. 3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 111 ஓட்டங்கள் எடுத்தது.

கொல்கத்தா தரப்பில் ஹர்ஷித் ராணா 3 விக்கெட்களை வீழ்த்தினார். தொடர்ந்து 112 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் ஆடிய கொல்கத்தா அணி, பஞ்சாப் வீரர்களின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 15.1 ஓவர்களில் 95 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் திரில் வெற்றி பெற்றது.

பஞ்சாப் தரப்பில் அபாரமாக பந்துவீசிய யுஸ்வேந்திர சாஹல் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகன் விருது சாஹலுக்கு வழங்கப்பட்டது. இந்த நிலையில், இந்த ஆட்டம் முடிந்த பின்னர் ரிக்கி பொன்டிங் கூறுகையில்,என்னுடைய இதயத்துடிப்பு இப்பொழுதும் அதிகமாக இருக்கிறது. தற்போது எனக்கு 50 வயது ஆகிறது. எனவே, இது போன்ற போட்டிகள் இனிமேல் வேண்டாம் என்று நினைக்கிறேன். 112 ஓட்டங்களை வைத்து போட்டியை வெற்றிகரமாக முடித்ததில் மகிழ்ச்சி. அதிலும் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நாங்கள் பெற்றது மிகச் சிறப்பான வெற்றி என்று நினைக்கிறேன்.

நான் ஐ.பி.எல் தொடரில் பயிற்சியாளராக பல்வேறு போட்டிகளில் பணியாற்றி இருக்கிறேன். ஆனால், இது போன்ற ஒரு வெற்றியை நான் எப்போதுமே பெற்றது கிடையாது. அந்த அளவுக்கு இந்தப் போட்டி விறுவிறுப்பான போட்டியாக இருந்தது- என்றார். (எ)

# “சோதனையை யாரும் பெரிதுபடுத்தவில்லை”

மும்பை, ஏப். 18

துடுப்பு மட்டை சோதனையை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளப்போவதில்லை என்று ஹைதராபாத் அணியின் பயிற்சியாளர் டானியல் விக்ரோரி தெரிவித்தார்.


நடப்பு ஐ.பி.எல். தொடரில் வழக்கத்துக்கு மாறாக நடுவர்கள் திடீரென வீரர்கள் பயன்படுத்திய துடுப்பு மட்டையை சோதனை செய்து வருகின்றனர். வீரர்கள் பயன்படுத்தும் துடுப்பு மட்டையின் அகலம், நீளம், வடிவமைப்பு என்பன ஐ.பி.எல். விதிமுறைக்கு உட்பட்டு இருக்கிறதா என்பதை சிறிய கையடக்க அளவுகோல் மூலம் சரிபார்த்து வருகின்றனர்.

இனி வரும் அனைத்து போட்டிகளிலும் இது கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும் என்று பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது.

இது குறித்து டானியல் விக்ரோரி கூறுகையில்,

“நான் விளையாடிய கால கட்டங்களில் துடுப்பு மட்டைகளை சரிபார்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். நடுவர்கள் வழக்கமாகவே வீரர்களின் ஓய்வு அறைக்கு வந்து துடுப்பு மட்டைகளை சரிபார்ப்பார்கள் என்பதால் இந்த சோதனைகள் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று நினைக்கிறேன். வீரர்கள் தொடர்ந்து சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

இந்தச் சோதனையை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளப்போவதில்லை. ஆனால், இதனையும் மீறி துடுப்பு மட்டையை எடுத்து செல்வது மிகவும் எளிது. எடையை அதிகரிக்காமல் துடுப்பு மட்டைகள் பெரிதாகி வருகின்றன. இது உற்பத்தியாளர்களின் திறமையை காட்டுகிறது. இந்த கால கட்டத்தில் வீரர்களின் தேவைக்கேற்ப துடுப்பு மட்டைகள் தயாரிக்கப்படுகின்றன.- என்றார். (எ)



# இந்தியா - பங்களாதேஷ் கிரிக்கெட் தொடர் ஓகஸ்டில்

புதுடில்லி, ஏப். 17

இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதும் கிரிக்கெட் போட்டித் தொடர் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

இந்தியாவில் தற்போது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. 10 அணிகள் கலந்து கொண்டுள்ள இந்தத் தொடர் அடுத்த மாதம் 25ஆம் திகதி முடிவடைகிறது. இந்தத் தொடர் நிறைவடைந்ததும் இந்திய அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடர் ஜூன் 20ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 04ஆம் திகதி வரை நடக்கிறது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் நிறைவடைந்ததும் இந்திய அணி பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரி - 20 மற்றும் ஒருநாள் தொடர்களில் விளையாடவுள்ளது.

3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகளில் விளையாட இந்திய அணி பங்களாதேஷ் செல்கிறது. இந்தத் தொடர் ஓகஸ்ட் 17ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்த தொடரில் முதலில் ஒருநாள் போட்டிகளும் (ஓகஸ்ட் 17, 20, 23), இதையடுத்து ரி -20 போட்டிகளும் (ஓகஸ்ட் 26, 29, 31) நடைபெறுகிறது. இது தொடர்பான அறிவிப்பை பி.சி.சி.ஐ. நேற்று வெளியிட்டுள்ளது. (எ)

## ஓர் ஓவரில் 11 பந்துகள்

# மோசமான சாதனை பட்டியலில் சந்தீப் சர்மா



புதுடில்லி, ஏப். 18

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில் ஓர் ஓவரில் 11 பந்துகள் வீசி மோசமான சாதனை பட்டியலில் சந்தீப் சர்மா இணைந்துள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில், டில்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 32ஆவது லீக் ஆட்டத்தில் டில்லி கப்பிட்டல்ஸ்- ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இதில்,சுப்பர் ஓவரில் டில்லி அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சந்தீப் சர்மா கடைசி ஓவரில் (20ஆவது ஓவர்) 4 அகலப் பந்து, ஒரு முறையற்ற பந்து உட்பட 11 பந்துகள் வீசி 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார்.

இதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் ஓர் ஓவரில் அதிக பந்துகள் வீசிய பந்துவீச்சாளர் என்ற மோசமான சாதனை பட்டியலில் சிராஜ், தேஷ்பாண்டே மற்றும் ஷர்துல் தாகூர் ஆகியோருடன் முதலிடத்தைப் பகிர்ந்துள்ளார். இவர்கள் அனைவரும் ஓர் ஓவரில் 11 பந்துகள் வீசி மோசமான சாதனை படைத்துள்ளனர். (எ)

# பார்சிலோனா ரென்னிஸ்: காலிறுதியில் சிட்சிபாஸ்

மட்ரிட், ஏப்.18

பார்சிலோனா ஓபின் ரென்னிஸ் தொடர் காலிறுதிக்கு சிட்சிபாஸ் முன்னேறியுள்ளார்.ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் இந்த ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான ரென்னிஸ் தொடரில் முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ளனர். கடந்த 12ஆம் திகதி தொடங்கிய இந்தத் தொடர் நாளை மறுதினம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீரர் செபஸ்டியன் கோர்டா, கிரீஸ் வீரர் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடிய ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் 7-6, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு...

போர் புரிந்தோம். அதனால் என்ன நடந்தது ? அழிவுகளைத்தான் சந்தித்தோம். எமது உறவுகளை இழந்தோம். வடக்கிலும் தெற்கிலும் அதே நடந்தது. மீள அப்படி ஒருநிலை எமக்கு வேண்டாம். எங்கள் தலைமுறைகள் போர் புரிந்தோம் அடுத்த தலைமுறைகள் போர் இல்லாது சமாதானமாக அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும்.

போர் இனவாத அரசியல்வாதிகளுக்கே தேவை எமக்கு தேவையில்லை. அரசியல்வாதிகளின் தலையீடு இல்லையெனில், திஸ்ஸ விகாரை பிரச்னையை தீர்ப்போம். யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை பிரச்னை இருக்கிறது. அதனை இலகுவாக தீர்க்க முடியும். அதற்கு அந்த விகாரையை வைத்து வடக்கில் அரசியல் செய்பவர்கள் அதிலிருந்து விலகவேண்டும். இதேபோன்று, தெற்கிலும் அந்த விகாரையை வைத்து அரசியல் செய்பவர்கள். அந்த அரசியலை கைவிட வேண்டும்.

அவ்வாறு அரசியல்வாதிகள் விகாரை பிரச்னையில் இருந்து விலகுவார்களாக இருந்தால் எம்மால் அந்தப் பிரச்னையை மிக இலகுவாக தீர்க்க முடியும். விகாரை காணி உரிமையாளர்கள், விகாரைக்குரிய விகாராதிபதி, நாக விகாரை விகாராதிபதி ஆகியோர் இணைந்து பேசி அதற்கு ஒரு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டில் தொல்பொருள் எச்சங்கள் காணப்பட்டால், அது தமிழா, சிங்களமா முஸ்லிமா, இந்துவா, பௌத்தமா என்று பார்க்காது. எமது நாட்டின் தொல்லியல் மரபு, எமது பண்பாடு என ஒரு நாட்டு மக்களாக சிந்திக்க வேண்டும். ஆனால், இனவாதிகள் அப்படி பார்ப்பதில்லை. அதன் ஊடாக இனவாதத்தைத் தூண்ட முயல்கின்றனர். அப்படியான இனவாத குழுக்களை மக்கள் இனங்கண்டு, அவர்களை தோற்கடித்துள்ளார்கள். இனி அவர்கள் எந்த வேடமணிந்து வந்தாலும் அவர்கள் இனவாதிகள் என்பதனை மக்கள் இனங்கண்டு அவர்களை தோற்கடிப்பார்கள். இதேவேளை, தேசிய மக்கள் சக்தி இனியும் இனவாதம் நாட்டில் தோன்ற இடமளிக்க மாட்டாது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புதிய அணி பாராளுமன்றம் வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பல பாரம்பரிய கட்சிகள் உள்ளன. கடந்த பொதுத் தேர்தலில் அவற்றைத் தவிர்த்து எமது கட்சியை சார்ந்த மூவரை தெரிவு செய்துள்ளீர்கள். புதிய ஓர் அணி யாழ்ப்பாணத்தில் இருந்து பாராளுமன்றம் வந்துள்ளது.

யாழ்ப்பாண மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம் வீணடிக்க மாட்டோம். இனவாதிகளுக்கு அஞ்சி மக்களுக்கு செய்ய வேண்டியதை செய்யாது இருக்கமாட்டோம். நாம் தேசிய ஒருமைப்பாட்டுக்காக என்றும் உழைப்போம். பாதுகாப்பு காரணங்களுக்கு என்று தமிழ் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் காணிகளை பாதுகாப்பு தரப்பிடமிருந்து மீளப்பெற்று காணி உரிமையாளர்களுக்கு கையளிப்போம்.

இன்னொரு யுத்தம் நாட்டில் தோன்றும் என்ற அச்சத்தில் கையகப்படுத்தப்பட்ட காணிகளை கடந்த அரசாங்கம் மீள கையளிக்கவில்லை. ஆனால், நாங்கள் இன்னொரு யுத்தம் நாட்டில் தோன்ற அனுமதிக்க மாட்டோம். அதனால், பாதுகாப்பு காரணங்களுக்கு என காணிகள் தேவையில்லை. விரைவில் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிப்போம். மூடப்பட்ட வீதிகளையும் படிப்படியாகத் திறந்து மக்கள் பாவனைக்கு கையளிக்கிறோம். வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் மூடப்பட்டு இருந்த வீதிகளை திறந்துள்ளோம்.

கொழும்பில் பாதுகாப்பு காரணமாக என மூடப்பட்ட வீதிகளை திறக்கும் போது ஏன் யாழ்ப்பாணத்தில் வீதிகளை திறக்கக்கூடாது. நாட்டில் பாதுகாப்பு காரணமாக என்று மூடப்பட்ட வீதிகளை திறப்போம். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என வெளிப்படுத்துவோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தகவல்களையும் வெளிப்படுத்துவோம். அரசாங்கத்திடம் - பொலிஸாரிடம் - இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்துவோம். ஒருவர் இறந்தால் அவருக்காக அழுது அவருக்கு செய்ய வேண்டிய கிரியைகளை செய்து, சிலகாலத்தில் ஆறுதல் அடைவோம். ஆனால், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா ? என்பது தெரியாமல் படும் வேதனைகளை நான் நன்கு அறிவேன். எனது சகோதரர்கூட காணாமல் ஆக்கப்பட்டவரே. அதனால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் வலி எனக்கு புரியும். எமக்கு அமைதி தேவை. அதற்காக அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கண்டறிந்து வெளிப்படுத்துவோம்.

நாங்கள் நாட்டை பொறுப்பெடுத்த காலம் முதல் நாட்டை வளப்படுத்தி வருகிறோம். எதிர்வரும் 5 வருடத்தில் அந்நிய செலாவணியை அதிகரிப்போம். கைவிடப்பட்ட பல செயல் திட்டங்களை தற்போது மீள ஆரம்பித்துள்ளோம்.

காங்கேசன்துறையில் ஒரு ஜனாதிபதி மாளிகை உள்ளது. அது எமக்கு தேவையில்லை. அதனை யாழ்ப்பாண மக்களுக்கு பயன்படக்கூடியவாறு மக்களுக்காக அதனை வழங்கவுள்ளோம். யாழ்ப்பாண பொதுநூலகத்தை எரித்தார்கள். அது எமது இதயங்களை காயப்படுத்தியுள்ளது. நூலகம் எரிக்கப்பட்டது இனவாதத்தின் உச்சமாகவே நாங்கள் பார்க்கிறோம். அதற்காகவே நூலகத்தை புனரமைக்க நிதி ஒதுக்கியுள்ளோம்.

நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் பெருமளவில் வருகிறார்கள் - அவர்கள் வடக்கு செல்வது குறைவாக உள்ளது. அதனால், நாம் உள்ளூர் விமான சேவைகளை வலுப்படுத்த உள்ளோம். அதன் ஊடாக சுற்றுலா பயணிகளை வடக்குக்கு செல்ல வைக்க முடியும். வடக்கில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் அழகிய கடற்கரைகள் உள்ளன. அவற்றை சுற்றுலா தலங்களாக மேம்படுத்துவோம். யாழ்ப்பாணத்தை அதன் பாரம்பரியம், கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தை மீள கட்டியெழுப்புவோம்.

வடக்கு கடற்பரப்பில் உள்ள கடல்வளங்களை அழிக்க அனுமதிக்க மாட்டோம். அந்த கடல் வளங்களை நம்பி பெருமளவான கடற்றொழிலாளர்கள் உள்ளபோது, அந்த வளங்களை அழித்து அவர்களின் வாழ்வாதாரத்தை அனுமதிக்க முடியாது. வடக்கு கடல் வளங்களை பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதனை எடுங்கள் என்று கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளோம்.

வடக்கில் இருந்து பலர் புலம்பெயர் நாடுகளுக்கு சென்றுள்ளார்கள். அவர்கள் மீள நாட்டுக்கு வரவேண்டும். எமது நாட்டை கட்டியெழுப்ப தங்கள் முதலீடுகளை நாட்டில் மேற்கொள்ள வேண்டும். கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து நாட்டை கட்டியொழுப்ப நாட்டுக்கு வருகை தரவேண்டும் என அழைப்பு விடுக்கிறோம்.

இந்த நாட்டில் கடந்த காலங்களில் பணம் உள்ளவர்களுக்கு ஒரு சட்டம் இல்லாதவர்களுக்கு ஒரு சட்டம் என சட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் பாகுபாடு இருந்தது. இனி அவ்வாறு இருக்காது. அனைவருக்கு சட்டம் பொதுவானதாக இருக்கும்.

தற்போது, வடமத்திய, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்கள் சிறையில் உள்ளனர். பல அமைச்சர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் நடைபெறுகின்றன. முன்னாள் ஜனாதிபதியின் இரு மகன்களுக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குகள் நடைபெறுகின்றன. குற்றம் செய்த யாரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியாது. வெளியிலுள்ள முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. நாம் ஒரு புது அத்தியாயத்தை தொடங்கியுள்ளோம். ஜனாதிபதி, பாராளுமன்றில் அறுதிப் பெரும்பான்மை என்பன எங்கள் கைகளில் உண்டு. ஆனால், கிராமத்தை கட்டியெழுப்ப எமக்கு மக்கள் ஆதரவு வேண்டும்.

பிரதேச சபைகளில் இருந்து வரும் முன் மொழிவுகளில் இருந்தே கிராமத்தை கட்டியெழுப்ப முடியும். பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி நடந்தால் அவர்களின் முன்மொழிவுகளை கண்களை மூடிக்கொண்டு ஏற்று அதற்கு நிதிகளை ஒதுக்குவோம். வேறு யாருடைய கைகளில் சபைகள் சென்றால் அவர்களின் முன்மொழிவு களை 10 தடவைகளுக்கு மேல் யோசனை செய்தே நிதி ஒதுக்குவோம்.

ஏனெனில், கடந்த காலங்களில் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், தேசிய மக்கள் சக்தி ஊழலற்ற அரசாங்கம். மத்தியில் ஊழலற்ற அரசாங்கமாக காணப்படும்போது, கிராம அபிவிருத்திகளில் ஊழல் செய்ய முடியாது. எனவே, தேசிய மக்கள் சக்திக்கு வாக்களியுங்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள 17 சபைகளையும் எமக்கு தாருங்கள். (ஐ)

## பிள்ளையானின் கைதால்...

முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

காலியில் நேற்று நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டமை தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஒருவரை கடத்தி காணாமலாக்கிய குற்றச்சாட்டுக்காகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டு, தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பிள்ளையானை சந்திப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி கோரினார். அவர் முன்னர், ஜனாதிபதியாக பதவி வகித்த தற்காக சட்டத்துக்கு முரணாக செயல் பட இடமளிக்க முடியாது. நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகவே உள்ளது. இவ்வாறான நிலையில் பிள்ளையானுடன் பேசுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் பிள்ளையானை சந்திப்பதற்கு உதய கம்மன்பில அனுமதி கோரியுள்ளார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதன் பின்னர் பிள்ளையான் சார்பில் தான் சட்டத்தரணியாக முன்னிலையாகுவதாகக் குறிப்பிட்டு, பிள்ளையானை சந்தித்துள்ளார்.

பிள்ளையான் சார்பில் முன்னிலையாவதாக உதய கம்மன்பில குறிப்பிடுகிறார். உதய கம்மன்பில சட்டத்தரணியாக இருக்கலாம். ஆனால், அவர் எந்த வழக்குக்காகவும் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. நாட்டு மக்கள் இதனை நன்கு அறிவார்கள். பிள்ளையானை கைது செய்தவுடன் ரணில் விக்கிரமசிங்க, உதயகம்மன்பில ஆகியோர் கலக்கமடைந்துள்ளனர்.

உதய கம்மன்பில கடந்த காலங்களில் சிங்கள - பௌத்த வாதம், இனவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியே அரசியல் செய்தார். அத்தகையவர் பிள்ளையான் தேசிய வீரன் என்று புகழ் பாடுகிறார். அவரின் தேசிய அரசியல் தோல்வியடைந்துள்ளது. கடந்த கால குற்றங்களின் பின்னணியில் அரசியல் பின்னணிகள் பல உள்ளன - என்றார். (ஐ)

## பொலிஸ்...

உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் தெரிந்த உங்கள் பிள்ளைகளை பொலிஸ் பணியில் இணைய செய்யுங்கள். இது ஒரு மரியாதைக்குரிய வேலையாகும். நம் நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் வேலை இது. தமிழ் பேசத் தெரிந்தவர்கள் அரச பணியில் சேர வேண்டும். இதன்மூலம் ஒன்றாக இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

இதேபோன்று இராணுவம் , கடற்படை, விமான படையிலும் தமிழ் இளையோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கு இங்குள்ள பெரியவர்கள் பெறறோர்கள் இளையோர்களை இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த எடுத்துக்கூற வேண்டும் - என்றார். (ஐ)

## யாழில் சர்வதேச...

கூறினார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிக்கிறோம். என்னை சந்தித்த சனத் ஜெயசூரியவிடமும், "எவ்வாறாவது யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கி சர்வதேச கிரிக்கெட் போட்டியை நடத்த வேண்டும்", என்று கூறினேன்.

முதல் 10 ஆண்டு காலப் பகுதிக்குள் இலங்கை கிரிக்கெட் அணியில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் உள்ளடங்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் நாம் ஒன்றுப்பட வேண்டும். கல்வி, விளையாட்டு, கலாசாரம், உட்பட அனைத்து துறைகளிலும் திறமைக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படும் - என்றார். (ஐ)

## யாழில்...

உள்ளனர்.

இதுகால வரையிலும் ராஜபக்ஷக்களுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆதரவாகச் செயல்பட்டு அவர்களின் காலடியில் இருந்தவர்கள் ஆட்சியைப் பொறுப்பெடுத்து ஆறு மாதங்களை பூர்த்தி செய்த எம்மைப் பார்த்து என்ன செய்துவிட்டீகள் என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

குறிப்பாக, 2015 முதல் 2019 வரையில் ரணில் விக்கிரமசிங்கவின் காலடியில் இருந்தவர்கள் யார் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சியைப் பார்த்து அச்சமடைந்து எம்மை இனவாதிகள் என்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க யார், அவருடன் இருந்தவர்கள் யார் என்பதை யாழ்ப்பாண மக்களுக்கு புதிதாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. யாழ். நூலகத்தை எரித்து - அதனை வேடிக்கை பார்த்து மகிழ்ந்தவர்களுடன் இருக்கிறபோது அவர்கள் இனவாதிகளாக தெரியவில்லையா?

ராஜபக்ஷக்கள் ஒவ்வொருவராக சிறைச்சாலையை நோக்கி நகருகிறார்கள். அதுமட்டுமன்றி ராஜபக்ஷக்களுடன் இணைந்து இலஞ்ச, ஊழல்களில் ஈடுபட்ட அனைவரின் விலாசமும் மகசின் சிறைச்சாலையாக மாற்றப்படுவது தவிர்க்க முடியாத விடயமாகும்.

வெறுமனே தென்னிலங்கை தலைவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதே வடக்கில் உள்ளவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படாதா என்று மக்கள் எம்மிடத்தில் கேள்வி கேட்கிறார்கள்.

மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள், ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள், பிரஜைகளை கடத்தி காணாமலாக்கியவர்கள் என்று யாழ்ப்பாணத்திலும் உள்ளார்கள். அவர்கள் மீதும் நடவடிக்கைகளை நாம் எடுப்போம். எமக்கு யாருடனும் பகைமை கிடையாது. அரசியல் ரீதியாக பழி வாங்க வேண்டிய நோக்கமும் கிடையாது. ஆனால், நீதியை நிலை நாட்டுவதும் மக்கள் ஆட்சியை உறுதிப்படுத்துவதும் எமது கடமை - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஊடக சந்திப்புக்கு வந்தோரை அச்சுறுத்திய பலாலி பொலிஸ்!

## வயாவிளான் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 18

**வயாவிளான் பகுதியில் காணி விடுவிப்பு தொடர்பான ஊடக சந்திப்புக்கு வந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்ட சம்பவமொன்று யாழில் நேற்று இடம்பெற்றுள்ளது.**

யாழில் விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக வலிகாமம் வடக்கு காணிகள் விடுவிப்புக்கான அமையம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில், வசாவிளான் சந்தியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாக அங்கு வந்த பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இது உயர் பாதுகாப்பு வலயம் எனவும் இங்கு கூட்டம் கூட முடியாது எனவும் ஊடக சந்திப்பு ஏற்பாட்டாளர்களுடன் பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முரண்பாட்டில் ஈடுபட்டார்.

தாம் எமது காணிகள் விடுவிப்பை வலியுறுத்தி ஊடக சந்திப்பை நடத்தவே வந்ததாகவும் போராட்டத்தில் ஈடுபடவில்லை என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களின் தேசிய அடையாள அட்டையை வாங்கி பெயர்களை பதிவு செய்த பொலிஸார் அங்கு நின்றவர்களை காணொளி மற்றும் புகைப்படங்களை எடுத்துச் சென்றனர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பங்குச் சந்தை வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 18

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

அதனடிப்படையில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 9.31 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அந்தவகையில் கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 15,616.57 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதன்படி கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்று 841 பில்லியன் ரூபாவாக பதிவா கியுள்ளது. (அ)

# சுகாதார உத்தியோகத்தர்களின் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்த புதிய திட்டம்!

கொழும்பு, ஏப் 18

சுகாதார உத்தியோகத்தர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் விசேட திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட வுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




இதன் முதற் கட்டமாக, சுகாதார அமைச்சில் நிறுவப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் உடற்பயிற்சி தொடர்பான டிப்ளோமாதாரி ஆலோசகர் ஒருவரின் கீழ், வாரத்தில் 5 வேலை நாட்களிலும் இந்த உடற்பயிற்சி கூடத்தைச் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கைதிகளிடையே வாக்குவாதம் சுடுநீர் வீச்சில் ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாண சிறைச்சாலையில் இரு கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சுடுநீர் வீச்சில் முடிவடைந்தது.

சிறைச்சாலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை கைதிகள் இருவர் சிறைச்சாலை சமையற்கூடத்தில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அவ்வேளை, ஒரு கைதி மற்றைய கைதியின் மீது சுடுநீரை வீசியுள்ளார்.

சுடுநீர் வீச்சுக்கு இலக்கான கைதி காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சுடுநீரை வீசிய கைதி தொடர்பாக சிறைச்சாலை நிர்வாகம் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதோடு, பொலிஸாரின் ஊடாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தேர்தல் சட்டங்களை மீறும் அறிக்கைகள் வேண்டாம்!

கொழும்பு, ஏப். 18

தேர்தல் சட்டங்களை மீறும் அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அளித்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து ஆணைக்குழு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அரசு அதிகாரங்கள் இல்லாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்கமாட்டேன் என்று அரசியல் மேடைகளில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கூறியதாக இந்த அமைப்புகள் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளன. (அ)

# மேலும் 4 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு

## மன்னாரில் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 18

எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து மேலும் 400,000 குடும்பங்களுக்கு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



மன்னார் பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் பேரணியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கில் நடந்த போர் காரணமாக, மக்களின் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்தவேண்டியிருந்தது. சில வீதிகளை மூடப்பட வேண்டியிருந்தது.

தேசிய மக்கள் சக்தி இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து, மக்கள் தங்கள் பணிகளைச் சுதந்திரமாகச் செய்யக்கூடிய ஒரு நாட்டை உருவாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பொய், ஏமாற்று அரசியலுக்கு அதிக ஆயுட்காலம் இல்லை!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 18

பொய், ஏமாற்று அடிப்படையிலான அரசியலுக்கு அதிக ஆயுட்காலம் இல்லை. மின் கட்டணத்தை 33 வீதம் குறைப்போம் என்று இந்த ஆளும் தரப்பினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறினர். மக்கள் எழுச்சியால் தான் 20 வீதம் கூட மின்கட்டணம் குறைக்கப்பட்டன. அரசாங்கம் தீர்மானம் எடுத்து இதனை நிறைவேற்றவில்லை. மக்களின் கருத்துக்களுக்கு ஏற்பவே இது குறைக்கப்பட்டது.




எஞ்சிய 13 வீத குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் பொலன்னறுவை தேர்தல் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-இன்று எமது நாட்டில் ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி அரசாங்கம் மக்களை ஏமாற்றி, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மீறி நடந்து வருகிறது.

ஒட்டுமொத்த 2.2 மில்லியன் மக்களையும் ஏமாற்றி வருவதை மக்கள் இன்று நன்கு உணர்ந்துள்ளனர்.

விவசாயப் பகுதிகளில் அடுத்த போகத்துக்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்றபோதிலும் உர மானியம் இதுவரை அவர்களுக்கு கிடைக்கவில்லை. பயிர் சேதங்களுக்கு இழப்பீடுகளோ கிடைக்கவில்லை. யானை மனித மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களின் பயிர்கள், உடமைகள் மற்றும் உயிர் சேதங்களுக்கு இன்னும் இந்த அரசாங்கம் தீர்வு காணவில்லை.

இம்முறை உரங்களின் விலையும் அதிகரித்து வரும் சூழ்நிலையில், விவசாயியை தூக்கி விடுவோம், விவசாயிகளைப் பாதுகாப்போம், விவசாயியைக் கடவுளாகக் கருதுகிறோம் என்று கூறிய திசைகாட்டி தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் ஒட்டுமொத்த விவசாய சமூகத்தினரையும் அழிக்கும் கொள்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று மக்கள் வாழ முடியாத அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றன. பொருட்களின் விலைகள் தாறுமாறாக அதிகரித்துள்ளன. பொது மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளன. மூன்று வேளை உணவு கூட சாப்பிட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது. அத்தியாவசிய உணவு மற்றும் பாடசாலை பொருட்களுக்கான வற் வரிகளும் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. அரிசி, பால் மா, தேங்காய், உப்பு ஆகியவற்றின் விலைகளும் தாறுமாறாக அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி அவர்கள், திசைகாட்டிக்கு அதிகாரம் கிடைக்காத சபைகளுக்கு நிதி ஒதுக்கமாட்டோம் என கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார்.

புதிய அரசாங்கத்தில் மக்கள் கண்ட பயன் எதுவும் இல்லை. சுத்த பொய்களை கொண்டு மக்களை ஏமாற்றி வரும் இந்த அரசியலைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது-என்றார். (அ)

# வவுனியாயில் இரத்த கறையுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் ஒப்படைப்பதில் தாமதம்

## சட்ட வைத்திய அதிகாரி வராமையால்

வவுனியா, ஏப். 18

வவுனியாவில் குளத்தின் அலைகரைப் பகுதியில் இருந்து இரத்த கறைகளுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.சட்ட வைத்திய அதிகாரி வராமையால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா, பாவற்குளத்தின், சூடுவெந்தபுலவு அலைகரைப் பகுதியில் இருந்து நேற்று மாலை இளைஞர் ஒருவரின் சடலம் இரத்தக் கறை காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது.கடந்த புதுவருட தினமன்று காணாமல் போயிருந்த வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் என்ற 33 வயது நபரே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த சடலத்தை நேற்று முன் தினம் மாலை பார்வையிட்ட பதில் நீதவான் அன்ரன் புனிதநாயகம், சடலத்தை உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டதுடன், சம்பவம் தொடர்பான துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பொலிசாருக்கு பணித்தார்.வவுனியா வைத்தியசாலையின் பிணவறையில், குளிரூட்டிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால், குறித்த சடலம் செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், வவுனியா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வராமையால சடலம் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படாது, செட்டிகுளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளதாக இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 18.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.